
ஐப்பசி 1993

# எரிமலை



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழீழ மாணவர் அமைப்பு ஜேர்மனி

தமிழீழ மாணவர் அமைப்பு ஜேர்மனியில் உருவாக்கப்பட்டு, பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

1. தமிழ் மாணவர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துதல், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல், தமது அமைப்பு விதிகளுக்கமைய ஆலோசனை வழங்குதல்.

2. தமிழீழ மாணவர்கட்கு உதவியளித்தல், கூட்டு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல், நவீன தொழில்நுட்பத்தை எமது நாட்டின் மூலவளங்களுக்கு ஏற்ப மாற்றுவது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.


3. தமிழர் கலை பண்பாடுகளை வளர்த்தல்; பேணிப் பாதுகாத்தல்.


4. ஜேர்மன் தமிழ் மாணவ, மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சி செய்தல்.

இவ்வமைப்பு தனது முதல் வேலைத்திட்டமாக தமிழீழ மண்ணை மீட்கப் போராடி மரணித்த மாவீரர்களின் ஞாபகார்த்தமாக மாவீரர்நாள் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியது. 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டு, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அணிவகுப்பு நிகழ்ச்சிகளையும் நடாத்தினர். மைதானத்தில் தமிழ்த் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. 1600க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

அகாலமரணமடைந்த மாணவி சுஜீத்தா புவனேஸ்வரனின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவதில் பெரும் பங்கு வகித்துள்ளது இவ்வமைப்பு. ❄







www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரண்டாம்
ஆண்டு
ஐப்பசி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris


www.tamilarangam.net

## சிங்கள இனவாதத்தின் சுயரூபம்

"இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை; இருப்பது என்னவெனில் பயங்கரவாதப் பிரச்சினையே." இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி விஜயதுங்கா பலதடவை சொல்லிவிட்டார். ஜனாதிபதியின் இக்கூற்றை தீவிர சிங்கள இனவாதி என கருதப்படும் காமினி ஜெயசூரிய பாராட்டியுள்ளார் என்பது மாத்திரமல்ல பாராளுமன்றத்திலுள்ள ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலரும் இக்கொள்கையை பகிரங்கமாக ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர். இதுகுறித்து தமிழ் மக்கள் எவரும் ஆச்சரியமோ அங்கலாய்ப்போ கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இதுதான் சிங்கள இனவாதத்தின் சுயரூபம். நாற்பது வருடத்திற்கு மேற்பட்ட காலப் பட்டறிவில் இதனைப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு தமிழர்கள் முட்டாள்களல்ல. சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிவிட முடியாது. அண்மையில் லண்டனில் நடந்த மாநாடு ஒன்றில் ஜேம்ஸ் மேனர் என்ற, இலங்கைப் பிரச்சினை குறித்து ஆழ்ந்த அறிவுள்ள அறிஞர், "இலங்கையிலிருப்பது ஒரேயொரு பயங்கரவாதமே; அது அரசபயங்கரவாதம்" என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இந்த இனவாதத்தின் முன் தற்போதுள்ள பிரச்சினை விடுதலைப் புலிகளை அழிப்பதும், வடக்கு கிழக்கைப் பிரிப்பதும்தான். முன்னைய ஜனாதிபதிகளைப் போல் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ற முகமூடி எதனையும் இந்த ஜனாதிபதி அணியவில்லை. விசயத்தை வெளிப்படையாகவே ராஜதந்திரப் பூச்சின்றி சொல்வது நல்லதுதான். இவ்வருட முடிவிற்குள் விடுதலைப் புலிகளை கிழக்கிலிருந்து அகற்றுதல், அடுத்த ஆனி மாத முடிவிற்குள் முற்றாக இல்லாதொழித்தல் போன்ற ஜனாதிபதியின் காலவரையறையுடனான போர்த்திட்டங்களும், முழுமையான இராணுவ நடவடிக்கைகளும் ஏற்கனவே பலதடவை பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டவையே. பல அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்து, பட்டினிபோட்டு வருத்தி, தமிழ்ச் சொத்துக்களை நாசம் செய்ததைத் தவிர இத்தகு இராணுவ நடவடிக்கைகள் எவ்வித பலனையும் முன்னர் கொடுத்ததில்லை; இனிமேலும் கொடுக்கப்போவ்திில்லை. அரசாங்கம் பணத்தை வீணே விரயமாக்குவதுதான் மிச்சம். சிறிலங்கா அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து தனது போர் நடவடிக்கைகளை நடத்த மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளின் எதிர்ப்பியக்கத்திற்கும் சேர்த்தே நிதி உதவிகளையும், கடனையும் பெறுவதாக பேர்வாங்கியதே. தவிர வேறொன்றுமில்லை. ஆனால் இன்னொரு விடயத்தில் தமிழ் மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். அதாவது, வடக்கு, கிழக்கைத், தமிழர் தாயகத்தைத் துண்டாடும் விடயமாகும். பல்வேறு முனைகளில் தென்தமிழீழம் தாக்கப்படுகின்றது. இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, சிங்கள ஆயுதப்படைகளில் தாக்கம் நிறைந்ததான விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைப் பகுதியாக கிழக்கு படிப்படியாக மாற்றப்படுவதும் நடைபெற்று வருகின்றது.

கிழக்கு, வடக்கு என பிரதேச ரீதியாக தமிழ் மக்களையே பிரிக்கின்ற விஷமப் பிரச்சாரங்களும், சதி நடவடிக்கைகளும் திட்டமிட்ட ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளில் சில தமிழ்க் குழுக்களும் இரகசிய உடந்தையாக செயல்படுவது அறியப்பட்டுள்ளது. வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பதா என்பதை தீர்மானிப்பதற்கென கிழக்கு மாகாணத்தில் குடியொப்பத்தை வைப்பதற்கான சரியான காலத்தை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. அதற்கு முதற்படியாக கிழக்கு மாகாணத்திலும் ஏனைய சில இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வைத்து நாடி பிடித்துப் பார்க்கவும், இராணுவ ஆட்சிக்கு ஜனநாயக முலாம் பூசி, மக்களைப் போராட்டத்திலிருந்து திசைதிருப்பவும் அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் இன்னும் சரியாக வாய்க்கவில்லை. இவற்றிற்கு வழி வகுப்பது போலவே சிங்கள இனவாத இயந்திரமான பாராளுமன்ற தெரிவுக்குழு, தனது இடைக்கால அறிக்கையில், வடக்கு, கிழக்கு பிரிந்த மாகாண சபைகளை அமைப்பது குறித்தும், அவற்றில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வைப்பது குறித்தும் சிபார்சு செய்யவுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்வுள்ள, மாகாண சபைகளுக்கு இந்திய மாநிலங்களுக்கு உள்ளதான கூடுதலான அதிகாரங்கள், பதின்மூன்றாவது அரசியல் சட்ட திருத்தத்தில் உள்ளவாறான பொதுப்பட்டியலில் இருந்து அதிகாரங்களை மாகாணப் பட்டியலுக்கு மாற்றுதல் போன்றவை வெறும் கண்துடைப்பும், நடைமுறைச் சாத்தியமற்றதுமான விடயங்களே ஆகும். வடக்கு, கிழக்கைப் பிரிப்பதற்கான தந்திரங்களே தவிர வேறொன்றுமில்லை. இத்தகு சூழ்ச்சிகர விடயத்தை சாதிக்க, சர்வதேச சமூக நாடுகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஆதரவைப் பெறும் நோக்குடன் சிறிலங்கா அரசாங்கம் அகில உலக ரீதியில் முடுக்கிவிட்டுள்ள திட்டமிட்ட பிரச்சார நடவடிக்கைகள் குறித்தே அனைத்துத் தமிழ் மக்களும் எச்சரிக்கை அடைதல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகளில் எழுதிய காவியம்

அன்றொரு காலம்..

சிங்களக் கடற்படையின் படகுகளைக் கண்டால் எங்களது சாதாரண படகுகள் கடலில் நிற்காது; நிற்கமுடியாது.

சண்டைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட நேவிப் படகுகளின் வேகத்திற்கும், அவற்றில் பொருத்தப்பட்டிருக்கின்ற சக்திவாய்ந்த ஆயுதங்களின் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க, எங்களது சாதாரண படகுகளால் முடியாது என்பதனால், தூரத்தில் கண்டவுடனேயே ஓடி மறைந்துவிட வேண்டும்; வேறு வழியில்லை. எங்கள் படகுகளை அழிப்பது அவர்களின் இலக்கு என்பதுடன், கலைப்பது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் இருந்தது.

ஆனால் இன்று, அந்நிலை நேர்மாறாக மெல்ல மெல்ல மாறி வந்துவிட்டது.


தரையைப் போல கடலிலும் சிங்களப்படையைத் துரத்தித் தாக்கி அழிக்கலாம் எனச் சொல்லித் தந்தவனும், முதன் முதலாக மட்டுமல்ல, தொடராகவும் அதனைச் செய்து காட்டியவனும் தான் எங்கள் சாள்ஸ்.

1991 இன் இறுதியில் அது ஆரம்பித்தது.

நயினாதீவிலிருந்து ஊர்காவற்துறைக்கு கடல் ரோந்து புரிகின்ற நேவிப் படகுகளை வழிமறித்துத் தாக்க சாள்ஸ் முடிவெடுத்தான்.

தளபதி கங்கைஅமரனின் துணையோடு றெக்கி பார்த்து, தாக்குதல் திட்டம் வகுத்து, தாக்குதல் குழுக்களை ஒழுங்கு படுத்தி, ஆயுதங்களோடு படகுகளைத் தயார் செய்து, தானே கொமாண்டராகி வியூகம் அமைத்து நின்று அந்தக் கடற்சண்டையை வழிநடத்தினான் சாள்ஸ்.

கனன் பீரங்கிகள், பிப்ரிகலிபருக்கும் மிகையான கனரகத் துப்பாக்கிகளுடன், அதிவேக ஓட்டம்கொண்ட நேவியின் சண்டைப் படகுகளை பிப்ரி, ஜி.பி. எம்.ஜி.யுடன் சாதாரண ரைபிள்களை மட்டுமே கொண்ட எங்களது மீன்பிடிப் படகுகள் துரத்தித் தாக்கின.



லெப். கேணல் சாள்ஸ்

சிங்களக் கடற்படையைப் புலிகளின் படகுகள் கலைத்து விரட்டிய முதல் வரலாறு அது.

எதிரியின் போர்ப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன், எல்.எம்.ஜி. ஒன்றும் கைப்பற்றப்பட்ட போதும், இழப்பேதுமில்லை எங்களுக்கு.

இதற்கு முன்னர், நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானிற்கும் இடையிலுள்ள கடலில் சாள்ஸ் நடத்திய ஒரு கண்ணிவெடித் தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

இரவு முழுவதும் ஆழ்கடலுக்குள் இறங்கி நின்று, அலைகளின் நடுவில் அவன் கண்ணிவெடியை விதைத்துவிட்டுவர,

மறுநாள் காலை, அதில் சிக்கிய எதிரியின் படகொன்றை அலைகள் விழுங்கிக் கொண்டன என்பதுடன், சிங்களக் கடற்படையின் வடபிராந்தியத் தளபதி கொமடோர் சமரவீர படுகாயமடைந்தார் என்பதும், 7 படையினர் கொல்லப்பட்டதும் முக்கியமானது. உடைந்த படகையும், ஆயுதங்களையும் கடலுக்கடியில் இருந்து மீட்டபின்னர்தான், சாள்ஸ் அடுத்த வேலைக்குப் போனான்.

1992 இன் துவக்கத்தில், தாளையடிக்கடலில், எதிரியின் 'சவட்டன்' விசைப்படகு மீது தானே கொமாண்டராக நின்று ஒரு பகற்பொழுதுத் தாக்குதலை நடாத்தினான் சாள்ஸ். எங்களது நான்கு வீரர்களை நாம் இழந்ததுடன், அவனுக்கும் காலில் காயம் ஏற்பட்டது அந்தச் சண்டையில்..

ஆனையிறவுக் கடல் நீரேரியில் எதிரியின் நீருந்து விசைப்படகொன்றை மூழ்கடித்து, பிப்ரி உட்பட ஆயுதங்களைக் கைப்பற்றிய கடற் கண்ணித் தாக்குதல்..

அதே நீரேரியில் எதிரியின் ரோந்துப்படகுத் தொடரைத் தாக்கி, பல ஆயுதங்களைக் கைப்பற்றிய இன்னொரு சண்டை..

மாதகல் கடற் பிரதேசத்தில், விசைப் படகொன்றை மூழ்கடித்த மற்றொரு கண்ணிவெடித் தாக்குதல்

பூநகரி கல்முனைக்கருகே உள்ள மான்தீவில், சிங்களப் படையின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கரையோரக் காவலரணைத் தகர்த்து, றைபிள்களோடு எதிரியின் சடலங்களையும் எடுத்துவந்த அதிரடித் தாக்குதல்..

இவ்வாறாக, கடற்புலிகளின் கடற்சண்டைத் திறன் வளர்ந்த ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னாலும் இருந்த உந்துவிசை அவன்.

அவனிடம் ஒப்படைக்கப்படுவது என்ன வேலையாக இருந்தாலும், அந்த வேலையோடு தன்னையே கலந்து செய்துமுடிக்கும் தன்மை அவனுடையது.

வெற்றிகரமான கடற்சண்டைகளின் முன்னோடித் தளபதி மட்டுமல்ல, அவனொரு சிறந்த தொழில்நுட்பவியலாளனுமாவான்.

வேலையில்லாத வேளையில்லாதவன் அவன். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்திருந்த உழைப்பாளி. ஓய்வு நேரங்களில் மூளைக்கு வேலை கொடுத்து எதையாவது ஆய்வு செய்துகொண்டிருப்பான்.

கைவசம் உள்ள வளங்களைக் கொண்டு புதிது புதிதாக எதையாவது கைபிடிக்க வேண்டுமென்றோ அல்லது கஷ்டப்பட்டுச் சிரமத்துடன் நாம் செய்கின்ற வேலைகளை இலகுவாகவும் வேகமாகவும் செய்துமுடிக்கக் கூடிய வழிகளைப் பற்றியோ அல்லது இப்படியான ஏதோ ஒரு விடயத்தைப் பற்றியோதான், அவனது 'ரெக்னிக்கல் மூளை' எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும்.

"முயற்சிசெய்து பார்த்துவிட்டோ அல்லது முயற்சி செய்து பாராமலேயோ ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிக்கொண்டு, 'இது சாத்தியப்படாது' என்று நாங்கள் ஒதுக்கி வைத்துவிடுகின்ற வேலைகளை, தானாகவே .பொறுப்பெடுத்து வெற்றிகரமாகச் செய்து முடித்துவிடுவான் அந்தப் பொறியியலாளன்." என்றான் ஒரு கடற்புலித் தோழன்.

கடற்புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியும் சாள்சின் அறிவாற்றலும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன.

வோக்கி கதைக்க 'குறொஸ்' செய்ய வேண்டும் என்றாலும் சரி, 'கொம்யூனிக்கேசன் செற்'றுக்கு தேவையான உதிரிப்பாகம் என்றாலும் சரி, என்னவாகத்தான் இருந்தாலும், 'அது வேண்டும் இது வேண்டும்' என்று எதிர்பார்க்காமல், உள்ளூரில் கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டே செய்து முடித்துவிடுவது தான், மற்றைய தொழில்நுட்பவியலாளர்களுக்கும் இவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு.

www.tamilarangam.net

கடற்புலி வீரர்களுக்கான படகுக் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தான் அந்தச் சிறந்த படகோட்டுனன். புயலுக்கும் சூறாவளிக்கும் இடையில் ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளுக்கு நடுவில், படகை நீண்ட தூரத்திற்குச் செலுத்தக் கூடியதான பயிற்சியை அளித்து, பெண்புலிகள் உட்பட திறமையான ஓட்டிகளை சாள்ஸ் உருவாக்கித் தந்தான். இப்போது அவன் இல்லை; ஆனால், அந்த பட்டறை இனி எப்போதும் புதியவர்களைத் தயார் செய்துகொண்டே இருக்கும், அவனது நினைவோடு.

சண்டை முனைகளில் நிலவும் போர்ச் சூழ்நிலைகளினால் தடங்கல்கள் ஏற்பட்டு, எமக்கு உணவு வராமல் விட்டுவிடுவது அடிக்கடி நடக்கும் ஒரு விடயம். ஆனால், சாள்சுடன் நின்று களங்களில் சமரிட்ட தோழர்கள் சாப்பாட்டுக்காக காவல் இருந்த நாட்கள் குறைவு. உடனடியாகவே அடுப்பில் சட்டியையோ வாளியையோ வைத்து, எட்டியவற்றைக் கொண்டு சுவையாகக் கறிசமைத்துத் தோழர்களுக்குக் கொடுத்துவிடுவான் அந்த அட்டகாசமான சமையல்காரன். அவன் தயாரிக்கும் கோழி சூப் இயக்கத்தில் பிரபலமானது. தலைவரிடமே பாராட்டுப் பெற்றது. சாள்சின் சூப் பருகவென்று நண்பர்கள் தேடிவந்த நாட்கள் கூட உணடு. எம்மைப் பிரிவதற்கு சில நாட்களுக்கு முன்பு கூட, மூர்த்தி மாஸ்ரர் வீட்டில் கோழி சூப் விருந்து படைத்துவிட்டுத்தான் அவன் போனான். அவன் ஆக்கித் தந்த சுவைகள் அவனது நினைவைத் தந்துகொண்டே இருக்கின்றன.

தோழர்களில் அவன் கொண்டிருந்த அன்பும் பாசமும் அலாதியானது. மற்றெல்லோரையும் விட வித்தியாசமான விதத்தில் பழகுகின்ற இவன், எல்லாப் போராளிகளினாலும் கவரப்பட்டு அவர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிலைத்துவிட்ட ஓர் உற்ற நண்பன்.



கிளாலியிலிருந்து வேலையாக வந்து எங்காவது நிற்கும் போது கோவில் திருவிழா பார்க்க நண்பன் அழைத்தால், "பொடியளை விட்டிட்டு வந்திட்டன்; நான் வரேல்லை." என்று போக மறுக்கும் சாள்ஸ், என்ன நிகழ்ச்சி பார்ப்பதற்கென்றாலும், அது சரியோ தவறோ, தன்னோடு நிற்கும் போராளிகள் எல்லோரையும் அழைத்துச் செல்லாமல் ஒரு நாள்கூட போயிருக்காத உயிர்த் தோழன்.

"எந்த மாவட்டத்திற்குப் போனாலும், அங்கு நிற்கும் யாராவது ஒரு போராளி வந்து 'சாள்ஸ் அண்ணையிட்டை சுகம் கேட்டதென்று சொல்லுங்கோ' என்பான்." என்று சொன்னார் பிருந்தன். அந்தளவுக்கு வியாபித்திருந்தது அவன் நட்பு.

தவறிழைக்கும் போராளிகளைத் தண்டிக்கும் போது, அரவணைத்து, அன்பாகப் பேசி பிழைகளைத் தெளிவுபடுத்தும் விதம், அவனில் வேறுபட்ட ஒன்றாகவே கண்டோம்.

வகுப்பு எடுக்கும் பொழுது, பகிடியாகவும் செல்லமாகவும் கதைத்து, தான் சொல்வதை

அவர்கள் மனவிருப்போடு கேட்டுப் படிக்கக்கூடியதாக விளங்கப் படுத்திக் கற்பிப்பது அவனுடைய பாணி. தனக்குத் தெரிந்த எல்லா வற்றையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும் தன்மை அவனுடையது. கடலிலும், தரையிலும் தான் பெற்ற அனுபவங்கள், பட்ட துயரங்கள், திறமையான செயற்பாடுகள் என எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பான். "புத்தகத்தில் படித்த அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; அனுபவம் மூலம் படிக்க நிறைய இருக்கு. அனுபவம் பலதரப்பட்ட பாடங்களையும் எங்களுக்குக் கற்பிக்கின்ற ஒரு வழிகாட்டி." என்று சொல்லி, தான் வளர்ந்ததைப் போலவே பட்டறிவு மூலம், போராளிகளை வளர்க்கும் வழி முறை அவனுடையது.

ஒவ்வொரு கடற்சண்டையின் முடிவிலும், அந்தக் கள நிகழ்ச்சிகளின் போக்குகளை ஆழமாக நோக்கி, சரி பிழைகளை ஆராய்ந்து, அந்தப் பட்டறிவின் அடிப்படையில் அடுத்த சண்டையை நெறிப்படுத்துகின்ற அவன், ஓர் அனுபவசாலியான படைத் தளபதி. எப்போதும் தானே நேரில் கடலில் இறங்கி, சண்டைகளை வழிநடத்தி, வீரர்களுக்குச் www.tamilarangam.net சொல்லிக்கொடுப்பது அவனுடைய பாணி. சிரிப்பூட்டும் பகிடிகளாலும், பம்பல்களாலும் எங்களை இன்பத்திலாழ்த்தும் அவனுடைய கதைகள், ஒரு தனித்துவமான கலாரசனை. எப்போதும் கலகலப்பாக, மகிழ்ச்சியாக பொழுதுகள் அவனோடு கழியும்.

போராட்டத்தைப் பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், தலைவரைப் பற்றியும் சொல்லிச் சொல்லி எப்போதும் எங்களை உற்சாகத்தில் வைத்திருப்பான் சாள்ஸ்.

என்றுமே மறக்க முடியாத பசுமையான நினைவுகள் அவனுடையவை. இன்று எங்களோடு அவன் இல்லை. ஆனால், எல்லோருக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான்.

சமர்முனைகளில் சண்டைகளை வழிநடாத்திக்கொண்டிருக்கும் அந்தத் தளபதி, மக்களை எங்களோடு இணைப்பதற்கு ஆற்ற வேண்டிய பணிகளைப்பற்றியும் சிந்திப்பான். ஒவ்வொரு தாக்குதலையும் தனியே இராணுவ வெற்றிகளாக மட்டும் வைத்துக்கொண்டிராமல், மக்களைத் தாயகப்பணிக்கு உள்வாங்கும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும் அவ் வெற்றிகளைப் பயன்படுத்தினான். ஆனையிறவு கடல் நீரேரியில் கண்ணிவெடியில் உடைந்து பயனற்ற விதத்தில் கடலுக்குள் மூழ்கிய விசைப்படகைக் கூட, விரைவாகச் சுழியோடி கட்டியிழுத்து வந்து, வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்ததும்,

ஊர்வாகற்துறைக் கடலில் சேதப்பட்ட நேவிப்படகையும், எடுத்த எல்.எம்.ஜியையும் யாழ்ப்பாணக் கரையில் சனத்துக்குக் காட்டியதும், அவனது அரசியல் சிந்தனைக்குச் சான்றுகள். புலிகளின் வெற்றிக் களிப்புக்களை மக்களோடு பகிர்ந்து கொண்டான் அந்தக் கடற்தளபதி. ஆனையிறவுக் கடல் நீரேரியில் சாள்ஸ் நடாத்திய ஒரு தாக்குதல், மேனி சிலிர்க்க வைக்கும் கதை.

மதியத்திற்குப் பிந்திய பகற்பொழுது அது. எட்டு விசைப் படகுகளில் கடல் ரோந்து வந்துகொண்டிருந்த சிங்களக் கடற்படையின் நீருந்து விசைப்படகு ஒன்று, ஏற்கனவே சாள்ஸ் வைத்துவிட்டுக் காத்துக்கொண்டிருந்த கண்ணி வெடியில் சிதறி மூழ்கியது.

திகைத்துப்போன நேவியின் ஏழு படகுகளும் அவ்விடத்தைச் சூழ்ந்துவிட, படகையும் ஆயுதங்க



**விடுதலைப் புலிகளின் கடற்படையணி.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளையும் தங்கள் ஆட்களையும் மீட்க அவர்கள் முயன்றுகொண்டிருந்தனர். பூநகரிப் பக்கமிருந்து அவசரமாக வந்த 'ஹெலி' வட்டமிட்டபடி பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தது.

சாள்சுக்கு ஏமாற்றம். படகையும் ஆயுதங்களையும் மீட்கமுன்னர், அவர்களைத் தாக்கிவிரட்டத் தயாரானான் அவன். கைவசமிருந்தது ஒரேயொரு படகு; அதிலிருந்ததும் ஒரே ஒரு கனரகத் துப்பாக்கிதான். அவர்களோ ஏழு சண்டைப் படகுகளில். ஹெலி வேறு மேலே. சமாளிக்க முடியுமா என கூடி நின்றவர்கள் சிந்திக்க, இன்னும் சில புலிகளுடன் படகைக் கடலில் இறக்கினான் அந்த வீரன்.

கரையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிருந்தன் சொன்னார்,

"ஜி.பி.எம்.ஜி. ரவைகளைப் பொழிய மின்னலெனத் தங்களை நெருங்கிய தனித்த ஒரு படகைக் கண்ட நேவி அதிர்ந்துபோனான். அவிழ்த்துவிட்ட பட்டிமாடுகள் வரிசையாக ஓடுவது போல, நேவிப் படகுகள் அனைத்தும் ஓட்டமெடுக்க, மேலே நின்று சுட்டுக் கொண்டிருந்த நேவியாலும் சாள்சைத் தடுத்து நிறுத்த முடியவில்லை."

அன்று கடலுக்குள்ளிருந்து படகையும், ஆயுதங்களையும் மீட்டுத்தான் சாள்ஸ் வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்தான்.

திருக்கோணமலையின் கடற்கரையோரம் உள்ளது திருக்கடலூர். அந்த வீரனைப் பெற்றுத் தந்த பெருமை அதற்குத்தான் சேரும். 1960இன் கடைசி மாதத்தின் 15ம் நாள், ஒரு அழுகுரலுடன் அது நடந்தது.

அப்பா ஆனந்தராசாவுக்கும், அம்மா விஜயதேவிக்கும் மகனாக, 2 அக்காமாருக்கும் 4 தம்பிமாருக்கும் இடையில் பிறந்தவனுக்கு, அவர்கள் ஆசையோடு வைத்த பெயர் தவராஜன்.

கடற்தொழில் அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்ல, அந்தக் கிராமத்திற்கும் சொந்தமானது. புனித ஜோசப் கல்லூரியில் 10ம் வகுப்பு வரை படித்துவிட்டு அப்பாவோடு தொழிலுக்குப் போனவன், சின்ன வயதிலேயே திறமைமிக்க படகோட்டியாகத் தேர்ச்சிபெற்றான். மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் அவன் பாடத்திட்டம் ஒன்றை பூர்த்தி செய்வதற்கு, இயற்கையாகவே அவனிடமிருந்த 'ரெக்னிக்கல் மூளை' துணையாக இருந்தது. தடங்கலின்றி சிங்களத்தில் உரையாடுவதோடு, ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலையும் சாள்ஸ் கொண்டிருந்தான்.

சிங்கள இனவாதப் புயல் எங்கள் தாய்நிலத்தில் கோரமாக வீசியபோது, எல்லோரையும் போலவே இந்தக் குடும்பத்தின் அமைதியான வாழ்வும் குலைந்தது.

பச்சைப் பேய்களின் பவனி. இராணுவ வண்டிகளின் வலம். சிங்களக்காடையர்களின் அட்டூழியம். திருக்கோணமலை எரிந்தது. தமிழர்கள் பிணங்களாய் குவிந்தார்கள். எங்கள் கடலில் அவர்கள். விடிகாலையில் கரையொதுங்கும் பிணங்கள். அந்த எரிமலை தனக்குள் குமுறும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அன்புத் தம்பி ஜெயராஜனை சிங்களத்துப்பாக்கிகள் கொரூரமாகக் கொன்றபோது, அவனால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

தாயகத்திற்குச் செய்யவேண்டிய பணி; சொந்த வாழ்வையும் தாக்கிய பேரினவாதம்; அவன் இயக்கத்திற்குப் போக முடிவெடுத்தான்.

புலிகள் இயக்கத்தின் தொடர்பு



கடலில் கடற்புலிகளினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் போது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தேடி சந்து பொந்தெல்லாம் அலைந்து திரிந்தான். நீண்ட காலத்தின் பின், 1985 இன் நடுப் பகுதியில், அது கிடைத்தது. சந்தோஷம் மாஸ்ரரைத் தேடிப் பிடித்து இயக்கத்தில் சேர்ந்தவன், திருமலையில் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும்போதே, புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு ஆற்றலை வெளிப்படுத்தி, திறம்படச் செயற்பட்டான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகங்களைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால், மிகச் சிரமமான அந்தப் பணியில் வண்டி ஓடிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்கு சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

இப்படித் தொடங்கியவன்தான், பின்பு கண்ணிவெடி வைக்கப் போகின்றவர்கள் ஆலோசனை பெற்றுச் செல்லும் அளவுக்குச் 'சக்கையில் எக்ஸ்பேட்' ஆகினான்.

திருகோணமலையில் சிங்களப் படை தனது முற்றுகையை இறுக்கிய ஒரு காலகட்டத்தை நினைவு கூர்ந்தார் பதுமன்.

அது இக்கட்டான சூழ்நிலை; உணவுக்கே பஞ்சமான நெருக்கடி. விநியோக வழிகள் எல்லாமே தடைப்பட்டுவிட்ட அந்த நாட்களில் புலிகளின் உணவுக்கால்வாயாக இருந்தவன் சாள்ஸ்தான். நிலமெல்லாம் ஆமி. கடலெல்லாம் நேவி. சாள்ஸ் படகெடுத்துப் போவான். அடிக்கடி கடலில் நேவி கலைப்பான். ஆனாலும் உணவோடு வந்து சாள்சின் வண்டி கரையைத் தொடும். “இன்று வண்டி ஓட முடியாது; கடலில் நேவி கூடுதலாக நிற்கிறான்.” என்று வோக்கி அறிவிக்கும். அப்போதும் தோழர்களுக்கு உணவு தர வண்டியோடு கடலில் இறங்குவான், இந்த உயிர்த் தோழன்.

ஒருநாள், சிங்களப் படையின் முற்றுகையின் போது காயப்பட்ட புலிவீரர்களைக் காவிக்கொண்டு அவனது படகு புறப்பட்டபோது, அமைதியாக இருந்த கும்புறுப்பிட்டிக் கடல், திடீரென வழமைக்கு மாறாய் மாறியது. கொந்தளித்த கடல் வண்டியைக் கவிழ்க்க, அலைக்குள் தவித்து, புண்ணுக்குள் பட்ட உப்புத் தண்ணீரால் துடித்த தோழர்களைப் பாதுகாப்பாக கரைக்கு கொண்டுவந்து சேர்த்தது கண்ணுக்குள் நிற்கிறது.

86இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து யாழ்ப்பாணம் வந்தபின், தமிழகத்திற்கு வண்டி ஓட்டுவது அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை. அந்தப் பணியின் போது அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப் போல நிகழும் சம்பவம். அப்படியான ஒரு நாளில்,

முன்னிரவு நேரம், பொருட்களோடும், போராளிகளோடும் வந்துகொண்டிருந்த சாள்சின் படகை, திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துத் தாக்க, இயலுமானவரை வேகத்தைக் கூட்டிச், சாள்ஸ் ஓட முயல, பீரங்கிக் குண்டுபட்டு வெடித்துச் சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான்.

கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல்க்கணக்கான தூரம். நேரம் செல்லச் செல்ல களைத்துப்போய் பின்தங்கிய முகம்மது கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய்விட்டான்.

எல்லாம் போய்விட்டது. தோழர்களை இழந்த துயர். நடுச்சமுத்திரம். உள்ளிழுக்கும் கடல். தனித்த ஒருவன். தளராத உறுதி. 17 மணி நேரம் நீந்தி, மறுநாள் மாலை வடமராட்சிக் கரையில் ஒதுங்கும் வரை, மயக்கம் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்காதிருந்தான் அந்த வேங்கை என்பதை, மற்றவர்கள் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது. அது அவனது மன வைராக்கியத்துக்குச் சான்று.

அந்த நினைவெல்லாம் 'நாங்களும் ஒருநாளைக்கு நேவிப்படகுகளைக் கலைத்து அடிக்க வேண்டும்' என்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக்கொண்டிருந்திருக்கும்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம். இப்போது அவனது பணி, மணலாற்றில் தலைவரின் நிழலில், போர் மையம் கொண்டிருந்த முனையில். மிகமிக இன்றியமையாத கடல்வழி விநியோகம்தான் இங்கும் அவனது வேலை. வண்டி ஓட்டிவிட்டு வந்து நிற்கும்போது, களைப்போடு எங்காவது படுத்திருப்பான் என்று தேடினால், போராளிகளுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருப்பான் அல்லது, 'கொம்யூனிக்கேசன் செற்'றில் ஏதாவது செய்துகொண்டிருப்பான். எதுவுமே இல்லாவிட்டால், சமையற் கட்டில் கறிக்கு உப்புப்புளி

www.tamilarangam.net

## நடப்பு நொடிக்கதை

சேவல் கூவியது.

'நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது...' என்று கதிரவன் பூரித்துப்போனான்.

மாலை வந்தது.

கதிரவன் மேற்குத்திசையின் மூலையில் கவிழ்ந்தான். சாயும்போது,

'நான் விழுகிறேனே; என்னைத்தாங்க யாருமே வரமாட்டார்களா?' என்று ஏங்கினான்.

சேவலை அவன் எதிர்பார்த்தான்.

வரவில்லை.

விழுந்துகொண்டே கதிரவன் சொன்னான்:

“எழும்போது தாங்க வருகிறவன் எல்லாம், விழும்போது தாங்க வருவதில்லை.”

*காசிஆனந்தன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிபார்த்துக்கொண்டாவது இருப்பான்.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்ட பின், சசிக்குமாரோடும் பிருந்தனோடும் யாழ்ப்பாணத்திலிருந்த பயிற்சி முகாம்களில் புதிய போராளிகளுக்கு துறை சார்ந்த வகுப்புக்கள் எடுத்துக்கொண்டு இருந்த சாள்ஸ், சிங்களப்படையுடன் மீண்டும் போர் தொடங்கிய பின், கடற்புலிகள் பிரிவோடு இணைக்கப்பட்டான்.

சாள்சின் எல்லாத் திறமைகளும், அனைத்து அம்சங்களும் முழுமையாக வெளிப்பட்ட காலம் அது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' புதிய பரிமாணம் பெற்றபோது, தளபதி சூசையின் உற்ற தோழனாக நின்று, கடற்புலிகளின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் அவன் உழைத்தான்.

சாள்ஸ் ஒரு கடற்காவியம்!

"விடுதலைப் புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியமான ஒரு அத்தியாயம்" என்று தலைவர் அவர்கள் சொல்கின்றார். "கடற்புலிகளின் வளர்ச்சியில் சாள்ஸ் ஒரு பிரதானமான உந்துவிசை" என்கிறார் தளபதி சூசை.

சாள்ஸ்!

ஒரு சிறந்த மனிதனாக, தேசப் பற்றும் உறுதியும் மிக்க போராளியாக, நட்புக்கொள்கிறவர்களுக்கு இனிய நண்பனாக, எதிரி அதிர சண்டைகளை வழிநடத்தும் தளபதியாக, புதியனவற்றைப் படைக்க முயலும் ஒரு தொழில்நுட்ப நிபுணனாக, போராளிகளுக்கு அறிவூட்ட விளையும் ஆசானாக, அலைகளைத் தோற்கடிக்கும் படகோட்டியாக, அட்டகாசமான சமையல்காரனாக, மக்களுக்குப் பணி செய்து நிற்கும் சமூகப் பற்றாளனாக... இன்னும்... இன்னும்... எல்லாவற்றுக்கும் பொருத்தமானவன் அந்த விடுதலைப் புலி.

சின்னக் குழந்தையாகத் தவழும் கடற்புலிகளை, பெரும் படை அமைப்பாகக் கட்டி எழுப்பும் கனவுகளோடு வாழ்ந்தானே அந்த வீரன்! தன்னையே உருக்கி அதன் அடி வேரில் பாய்ச்சியல்லவா அதனை நெடிதுயரச் செய்து கொண்டிருந்தான். ஏன் திடீரென எங்களை விட்டுப் போனான்?

கண்ணுக்குள் சுழல்கிறது அந்த நிலவு முகம். இறுதி நாட்களில் கிளாலிக் கடலில், எதிரிக்கு முன்னால் அது செஞ்சூரியனாய்ச் சுட்டெரித்தது.

**24.06.1993** அன்றிரவு.

**20** மைல் நீளப் பெருங்கடல். படகோட்டம் தொடங்கிவிட்டது. ஏக்க விழிகளோடு படகுகளில் மக்கள். தமிழரின் பிணந்தின்னக் காத்திருக்கும் சிங்களச் சுறாக்கள். மக்களைக் காக்கும் பணியில் அவர்கள் குழந்தைகள். அவர்களை வழிநடாத்தியபடி களத்தில் சாள்ஸ்.

ரவைகளைப் பொழிந்தபடி விரைந்து வருகின்றன எதிரியின் படகுகள். நேருக்கு நேர் எதிர்கொள்கின்றன புலிகளின் படகுகள். பிப்ரியும், எல்.எம்.ஜியும் தணல் கக்கிய ஒரு படகில் சாள்ஸ். இருள் வானைக் கிழித்தன ஒளிக்கோடுகள். அதிர்ந்துபோனான் எதிரி!

எதிர்பாராத கணம்! திடீரென எல்.எம்.ஜி இயங்க மறுத்தது. அது கைவிட்டுவிட்டது. சாள்சின் கையிலிருந்து முழங்கிய பிப்ரியை மட்டும் நம்பி எதிரியை 'நெத்தி முட்ட' நெருங்கியது படகு! இடைவெளி நன்றாகக் குறுகிவிட்ட நிலையில் இன்னொரு எதிர்பாராத கணம். பிப்ரியும் இயங்க மறுத்துவிட்டது. சாள்ஸ் திரும்பத் திரும்ப கோக் பண்ணி கோக் பண்ணி அடிக்கவும், அது பிசகிக்கொண்டேயிருந்தது. எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையில், படகைப் பக்கவாட்டாகத் திருப்பி எடுக்க முயல, நேவியோடு போராடப் பிப்ரியோடு போராடிக்கொண்டிருந்த சாள்ஸ்சின் உடலைத் துளைத்துச் சென்றன ரவைகள்! உடனடியாகக் கரையை நோக்கித் திருப்பப்பட்டது படகு. இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. நீளக் கடல். ஓட ஓட கடலும் நீண்டுகொண்டேயிருக்க, இரத்தப்பெருக்கு அதிகமாகிக் கொண்டே போனது. சண்டையின் துவக்கத்திலேயே நாங்கள் மகானை இழந்துவிட்டோம். படகு கரையைத் தொடும்போது எங்கள் சாள்சும் எங்களை விட்டுப் போய்விட்டான்.

மக்களின் படகுகள் பாதுகாப்பாக மறுகரையை அடைந்து கொண்டிருந்தன.

ஓ.....சாள்ஸ்! எங்களின் கடற்போர்த் தளபதியே! உனது நினைவுகளையும், கனவுகளையும் எங்களோடு விட்டுச் சென்றுவிட்டாய். நீ சுமந்த இலட்சியத்தை நாங்களும் சுமக்கின்றோம். அதை அடையும்வரை நாங்கள் ஓயமாட்டோம்; உன்னைப் போலவும் கடலின் அலையைப் போலவும்!

**நன்றி விடுதலைப் புலிகள்.**

## மாதிரிக் குடியேற்றம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் சுன்னாகம் தெற்கில் ஏற்படுத்தப்பட்ட மாதிரிக் குடியேற்றத்திட்டம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. குடியிருப்பாளர்களுக்கான திறப்புக்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் வழங்கினார். இக் குடியேற்றத்திட்டத்தில் 14 குடிசைகள் நீர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. 21 பரப்பில் இக்குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது. போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள 14 குடும்பங்களுக்கு இக்குடிசைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனை வளமும் பனைவளச் சிந்தனையும்




“பூநகரி ப.நோ.கூ.சங்கம்”

இரண்டாம் ஈழப்போரின் ஆரம்பத்துடன் ஈழ அபிவிருத்தி தொடர்பான பல புதிய சிந்தனைகள் அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. ஒரு தேச விடுதலைப் போரின்போது, அமைக்கப்படவிருக்கின்ற தேசத்தைப் பல துறை சார்ந்து வளமாக்கச் சிந்திப்பது இயல்பாக எழும் ஒரு அம்சமாகும்.

இக்கண்ணோட்டத்தில் தமிழீழ தேசத்தின் மர வளர்ப்பில் பனைமரம் ஒரு தனி அம்சமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பனைவளம் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளிலேயே செழித்திருந்ததன் காரணமாக பனை அபிவிருத்தி என்பது சிறிலங்கா இனவாத அரசுகளினால் ஓரம்கட்டப்பட்டது அல்லது அசட்டை செய்யப்பட்டது என்று கூறலாம்.

இது இவ்வாறு இருக்கும் போது சிறிலங்கா தங்கி நிற்கும் நாடுகளில் பயன்படுத்தப்படும் வீட்டுப் பாவனைப் பொருட்கள், தொழிற்சாலைக் கழிவு அகற்றும் உபகரணங்கள், வீதி துப்பரவு செய்யும் பொருட்கள் போன்றவைகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்த நிலையில், பனையிலிருந்து கிடைக்கும் தும்பு, குருத்தோலை, ஈர்க்கு, பனைமட்டை போன்றவற்றை மாற்றீடாக விற்பனை செய்யும் சிந்தனை உருவாக்கம் பெற்ற காலங்களில் சிறிலங்கா அரசும் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய தவிர்க்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன் காரணமாக பனைவளம் தொடர்பான நிறுவனங்களை அங்கீகரித்திருந்தமையும், உருவாக்கியிருந்தமையும் வியப்பானதல்ல. அது மாத்திரமல்லாது, பனை அபிவிருத்திக்கென சர்வதேச நிதி நிறுவனங்களிடம் உதவியும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், பனை அபிவிருத்தி என்பது எந்த அளவுக்குச் செயல் உருவாக்கம் பெற்றது என்பதில் இனவாத சிந்தனையையும் ஆய்வாளர்கள் இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். சுருங்கக் கூறின் இந்த அரசானது தனது எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளையும், அதேவேளை, தமிழ்ப் பகுதிகளின் பொருளாதாரத்தை செயற்கையாக மந்தமடையச் செய்ய எடுக்கின்ற நடவடிக்கைகளையும் ஆதாரமாக வைத்து அதன் உள்நோக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

மக்களின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஒன்றாக பனை வளர்ப்பு நடைபெறவில்லை. ஆனால் பனை வளத்தினைக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளலே நடைபெற்றது. இதுவும், தமிழ்ப்பகுதிகளில் இருக்கின்ற பனைகளின் எண்ணிக்கையுடன் பனை வளத்தினைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்களின் தொகையை ஒப்பிடுகையில் குறைவான, மந்தமான செயற்பாடாகவே இருந்து வந்துள்ளது தெரிகின்றது.

சில புறநிலைக் காரணிகளால் சில காலங்களில் உற்பத்தி அதிகரித்திருந்தாலும், தொடர்ந்து ஒரு காத்திரமான படிமுறையில் சுதேச உற்பத்திக்கான பங்களிப்பு நடைபெற்றுள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. பனை வளர்ப்பில் கால்நடை மூலமான பரம்பலும் ஆதிக்கம் செலுத்துகின்றது. தாயுடன் பிள்ளை வளர்வது போன்று நமது தேசிய மரங்களில் ஒன்றான பனை வளர்கின்றதே அன்றி பனை வளர்ப்பு என்பது இதுவரைக்கும் எமது பனைவளமுள்ள பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட மக்களாலும் சரி, பனைகள் வளர்வதற்குச் சாதகமான பௌதீகத் தன்மைகளைக் கொண்ட பகுதிகளில் வாழும் மக்களாலும் சரி ஒரு தொழில் முயற்சிக்கான உற்பத்தி என்ற எண்ணத்தின் அடிப்படையில் நடைபெறவில்லை; பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்படவில்லை. இருந்தாலும், அது ஆயிரத்துக்கு ஒன்றாக இருக்குமோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆனால் சமகாலத்தில் பனை வளர்ப்பு, பனைவளம் சார்ந்த உற்பத்தி என்பது அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. இது, இச்சிந்தனைகளை நோக்கமாகக் கொண்ட அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. இச்சிந்தனைக்கு செயல்வடிவம் காட்டிவரும் அமைப்புகளுள் விடுதலை அமைப்பு மட்டுமல்லாது தமது தொழில்படு பிரதேசங்களுக்கு ஏற்ப பனைவள நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள் என்பனவும் குறிப்பிட்ட அளவு அக்கறை காட்டி வந்திருக்கின்றமையும் இங்கு குறிப்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்தக்கது.

இன்று பனம் விதைகள் நடுதல், தேச விடுதலைப் போரின் காரணமாகச் சமுதாயத்தில் புதியதாக உருவாகியுள்ள பண்பாட்டு நிகழ்வுகளில் இடம்பெறும் அம்சமாக இருக்கின்றது. உதாரணமாக மாவீரர் வாரத்தினை ஒட்டி மரம் நடுகை வைபவங்களிலும், மாவீரர் நினைவு தின நிகழ்வுகளிலும் பனம் விதைகள் நடுகை செய்யப்படுகின்றன. முன்பு தேர்தல் காலங்களில் அபேட்சகர்கள் வருகை, பாராளுமன்ற உறுப்பினர் வருகை, கட்சிகளின் மாநாடு போன்றவை காரணமாக பனை வடலிகள் தறிக்கப்பட்டு வீதி அலங்காரத்திற்காக அழிக்கப்பட்டமையையும், மாவீரர்கள் நினைவாக பனம் விதைகள் நாட்டப்படுதலையும் ஒப்பிடுகையில் பனை வளர்ப்பு, பனைவளம் என்பது பற்றிய சிந்தனையில் ஏற்பட்ட மாறுதல்கள் சமகாலத்தில் முன்னேற்றம் கண்டுள்ளன என்றே கூறலாம்.

எனவே, இச்சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி பனை விருத்திகளில் அக்கறை காட்டும் ஸ்தாபனங்கள் பனை வளர்ப்பு, பனைவளம் பேணல் போன்ற செயல்பாடுகளை அதிகரித்தல் வேண்டும். பனை வளத்தின் உச்ச பயன்கள் மக்களைச் சாரவும், பனை வளத்தினை தேசத்தின் பொருளாதார மேம்பாட்டுடன் பிரித்துப் பார்க்க முடியாத தேசிய அம்சங்களில் ஒன்றாக ஆக்கவும் செய்யத்தக்க வேலைத்திட்டங்களை அடித்தளமிடுவதும், இவ்வாறான சுதேச அபிவிருத்தி அமைப்புகளின் முன்னுள்ள இன்றைய பணியாகும்.

சுதேச அபிவிருத்திச் சிந்தனையானது தணிந்து கொண்டு போகும் காலங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். இக்காலங்களின் போது ஸ்தாபனங்கள் அல்லது பரந்த அமைப்புக்கள் முனைப்புடன் செயற்பட்டு தொடர்ந்து மக்கள் மத்தியில் இப்பணிகளை நடைமுறைப்படுத்துவதனை தமது வரலாற்றுக் கடமைகளில் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமே.

எனவே இதற்கான வேலைத் திட்டங்களை அமைக்க கீழ் வரும் இரண்டு அம்சங்களை கருத்தில் எடுக்க வேண்டியுள்ளது.






**1. தற்போது சர்வதேச சந்தைகளில் பனம் கைப்பணிப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு அதிகரித்துள்ளமையினை தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.**

**உதாரணமாக பனை ஓலைத் தொப்பிகள் அணியும் பழக்கங்கள் மேலைத் தேசத்தவர்களிடம் அதிகரித்து வருகின்றது. இதற்கு ஓசோன் படைகளில் ஏற்பட்ட ஒழுக்குகளினால் (ஒட்டைகள்) புவிக்கு வரும் சூரிய ஒளித் தாக்கத்திலிருந்து ஒரளவேனும் தங்கள் உடலைப் பாதுகாக்கக் கூடியதாக பனை ஓலைத் தொப்பிகளின் சிறகுகளைப் (கீழ்ப்பகுதி) பெரிதாக்கி அணிந்து வருகின்றனர். இது தேவையுடன் கூடிய நாகரிகமாகவும் கருதப்பட்டு, துரிதமாக பரவி வருவதை ஆதாரங்களுடன் அறிய முடிகின்றது. இதே போன்று பனம் தும்புக்கும் வெளிநாடுகளில் மிகுந்த மதிப்பு ஏற்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது.**

**2. தனியே சர்வதேச சந்தை வாய்ப்பினை மட்டும் கருத்தில் கொள்ளாது, இச்சர்வதேச சந்தை வாய்ப்புக்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களையும் ஆய்வு செய்தல் வேண்டும். எமது தேசத்தின் அன்றாட வீட்டு பாவனைகளின் உற்பத்தி, விசேடமாக மக்களின் ஆரோக்கியத்தையும், ஆயுள் நீடிப்பினையும் பேணும் பனம் உணவுப் பண்டங்களின் உற்பத்தி என்பவைகளுக்கு முதலிடம் கொடுத்து நோக்குவது அவசியமே.**

எனவே மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இவ் உற்பத்திகளில் நவீன முறைகளைக் கையாளுதல், இதன் மூலம் இப்பொருட்களுக்கான உற்பத்திச் செலவுகளை குறைத்தல் போன்ற விடயங்கள் மிக ஆழமாக ஆய்வுசெய்யப்பட்டு அணுகப்படல் வேண்டும். இவ்வாறு திட்டமிட்டு செயல்படும் போது பனை வளத்தினை மக்கள் தமது பண்பாட்டுடன் கூடிய தொழிலாக ஏற்றுக்கொள்ளக் கூடிய் வகையில் மாற்றங்கள் ஏற்படுவதும் சகஜமே.

எனவே எதிரியின் பாரிய பொருளாதார அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வாழவேண்டிய எமது தேசத்தில், பனம் கூடல்கள், பனைப்பிட்டிகள் என்ற பெயர்கள் மாறி பனைகள் உற்பத்தி செய்யப்படுகின்ற பனம் தோட்டங்கள் என்ற எண்ணக்கரு உருவாக வேண்டும். இத்தகு காலத்தை உருவாக்கக் கூடிய சிந்தனைகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டியது தேச பொருளாதார மேம்பாடு பற்றி சிந்திக்கும் சகலரதும் கடமையாகும்.

❄❄❄❄❄❄❄❄❄❄

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# விடியலைக் காணும் நாள்

## கேணல் கிட்டு

உண்மையில் மிக இளம்பிராயத்தவர்களையும், குறிப்பாகக் குழந்தைகளையும் அவர்களின் படிப்பையும் நாம் மிகவும் கவனத்திற் கொள்ளவேண்டும். விஞ்ஞானம் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் நாட்டின் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதியளவுக்கு, குழந்தைகளின் பராமரிப்புக்கு, கல்வி போன்றவற்றிற்கு ஒதுக்கப்படுகின்றன. ஆனால் இன்றும் கூட நம் நாட்டில் குழந்தைகளின் கல்வி ஒரு அமைப்பு ரீதியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. குழந்தைகளைச் சரியாக வழிநடத்துவதன் மூலமே நாம் ஒரு எழுச்சி மிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும். இன்று யாழ்ப்பாணத்தில் கூட பாலர் பாடசாலைகள் எந்த ஒரு வரைமுறைக்கும் உட்பட்டதாக இல்லை. இப்பாடசாலைகள் எல்லாமே பயிற்சி பெற்ற ஆசிரியர்களாலோ, எந்த ஒரு அமைப்பினூடாகவோ செயற்படுத்தப்படவில்லை. பதிலாக, ஆங்காங்கே எந்தவித பயிற்சியும் இல்லாதவர்களினால் பாலர் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

இவை தவிர்க்கப்பட்டு பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மிக நவீனமுறையில் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். இதை விடவும் அனைத்துப் பாடசாலைகளும் ஒரே கட்டுப்பாட்டிலும், ஒரே நெறிமுறையிலும், ஒரே அமைப்பின் கீழும் இயங்கச் செய்யவேண்டும். ஏனென்றால் குழந்தைப் பிராயத்திலேயே குழந்தைகளின் மனநிலையை உளவியல் ரீதியாக நன்றாகத் திட்டமிட்டு வளர்ப்பதுதான் எமக்குச் சிறப்பான எதிர்காலச் சந்ததியினரை அமைத்துக் கொடுக்கும். கடந்த காலங்களில் இராணுவ நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு சொல்ல முடியாதது. தினம்தினம் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலுக்கும் இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் குண்டுகளுக்கும் இவ்வாழ்க்கையே பழக்கப்பட்டுப் போன எம்மையே பாதிக்கும்போது, குழந்தைகளின் மனநிலைப் பாதிப்பைக் கூறவும் வேண்டுமா?




நான் ஒருமுறை எனக்குப் பழக்கமான டாக்டரிடம் உரையாடிக் கொண்டிருக்கையில், தன்னிடம் ஒரு முதியவர் வைத்தியத்திற்காக வந்ததாகவும், அவருடைய நோய் விசித்திரமானதாகவும் தீர்க்க முடியாததாகவும் இருந்ததாகக் கூறினார். அதாவது அந்த வயோதிபர் தானிருக்கும் இடத்திற்கு மேலாக இராணுவ ஹெலிகொப்டர், விமானம் பறக்கும்





www.tamilarangam.net



பொழுது தன்னையும் அறியாமல் சிறுநீர் கழித்துவிடுவதாகக் கூறினார். இப்படித்தான் எமது சமுதாயம் உளவியல் ரீதியாகக் கூட மிகவும் பாதிப்படைந்து வருகிறது. உலக அனுபவம் வாய்ந்த முதியவரே இப்படி நிலைக்கு ஆளாகி இருக்கும் பொழுது, குழந்தைகளின் மனநிலை பாதிப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும்? நான் கூறுவது அனைத்தும் உளவியல் ரீதியான பாதிப்புக்களைத் தான். நேரடியான தாக்கம் ஊரறிந்த விடயம்.

ஆகாயத்தில் குண்டுவீச்சு விமானங்கள் தோன்றும் பொழுது, அதை முதலில் கண்டவரிடமிருந்து எழும்பும் 'பொம்பர்' என்ற எச்சரிக்கைக் குரல் சனங்களின் காதுகளில் புகுந்தவுடன் அவர்களின் முகங்களில் தெரியும் பயப் பீதி, மரணபயம், பதட்டம், அவதி இவற்றையெல்லாம் பார்த்து தம்மையும் அறியாமல் அலறும் குழந்தைகளின் ஓலக்குரல் செவியை அடைத்துவிடும். இப்படியாக உளவியல் ரீதியாக பாதிப்படைந்த குழந்தைகளுக்கு சிறிதளவேனும் நிவர்த்தி கொடுக்க வேண்டும் என்பதற்காக பல பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை நிறுவி வருகின்றோம். அதைவிட யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் கந்தர்மடம் என்னும் இடத்தில் சரணாலயம் ஒன்று நிறுவியுள்ளோம். சரணாலயம் என்ற பெயர் இருந்தாலும், உண்மையில் அது ஒரு சிறிய மிருகக் காட்சிச்சாலை போன்றே உள்ளது. இப்படியான முயற்சிகளினால் சிறுவர்களினதும், குழந்தைகளினதும் மனநிலையை திடமாக்க முயல்வோம். எந்தவிதமான பொழுதுபோக்கு வசதிகளும் இல்லாமல் மிகப் பெரிய இராணுவ அழுத்தத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளை உளவியல் ரீதியாக பாதிப்படையாமல் வழிநடத்த வேண்டும்.

**('குழந்தைகள் வளர்ப்பு' பற்றி 'கேணல் கிட்டு' அவர்கள் 1989ம் ஆண்டு தமிழக 'தேவி' இதழில் எழுதியதிலிருந்து...)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயின் மடியில் மூன்று நாட்கள்

உலகமங்கை



"அப்பா எங்களை விட்டிட்டுப் போய்விட்டார். அம்மா தோட்டத்துக்கு மிளகாய்ப்பழம் புடுங்கப் போட்டா. மத்தியானம் வந்து பாண் வேண்டித் தருவா. பிறகு பின்னேரம் போய்விடுவா. எனக்குப்பிறகு மூண்டுபேர் இருக்கினம். அவையளை நான்தான் பார்க்கிறது. அதாலதான் பள்ளிக்கூடம் போறதில்லை."

இது ஒரு சிறுமியின் குரல்.

பிரான்பற்று, நிச்சாமம் கிராமங்களில் நாம் சந்தித்த பெரும்பாலான சிறுமிகளின் கதையும் இதுதான்.

* * *

இன்று உலகிலே பிரச்சினைகளை எதிர்நோக்காத மனிதர்களே இல்லையெனலாம். ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு வகையாக, வெவ்வேறுபட்ட இடங்களில், வெவ்வேறுபட்ட வடிவங்களில்......

அதிலும் குறிப்பாகப் பெண்களே அதிகளவிலான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளார்கள். ஏனென்றால் ஒரு பெண்ணானவள் ஒரு மனித உயிர் என்றவகையில் மேலும் சில பிரத்தியேகமான பிரச்சினைகளோடு இரட்டிப்பான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி நேரிடுகிறது என்றால் மிகையாகாது.

தமிழீழத்தில் வாழும் பெண்களும் இதற்கு எந்த வகையிலும் விதிவிலக்கானவர்களல்ல. இவர்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளை, சிக்கல்களைக் கண்டறிந்து, அவற்றின் தன்மையை ஆராய்ந்து, அவற்றிற்கான தீர்வுகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தி, தமிழீழப் பெண்ணினத்தை ஒரு மேன்மையான இடத்துக்கு வளர்ச்சியுறச் செய்வதே விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினராகிய எமது நோக்கமாகும்.

பெண்களின் சிக்கல்களை அறிவதற்காக நாம் அவர்களுடன் மனம்விட்டுப் பழகுகிறோம். எமக்கும் பெண்களுக்குமிடையே ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்வதில், நாம் ஓரளவுக்கு வெற்றியும் பெற்று வருகின்றோம்.

**1993.03.25, காலை 9.00 மணி.**

மக்களுக்கும் தமக்குமிடையிலான குடும்ப உறவுகளை மேலும் நெருக்கமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் எமது இயக்கத்தின் அரசியல் துறையினர் தமது திட்டத்தின் முதற் கட்டமாக பிரான் பற்று, நிச்சாமம் ஆகிய இரு கிராமங்களையும் நோக்கிப் புறப்பட்டனர். அந்தக் கிராமங்களிலுள்ள பெண்களுடனான நெருக்கத்தை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் நாமும் புறப்பட்டோம்.

எமது பிறவேலைகள் காரணமாக சிலகாலம் மக்களின் நெருக்கமான உறவுகளைப் பிரிந்திருந்த எமக்கு, நீண்டகாலப் பிரிவின் பின் தாய்வீட்டுக்கு விடுமுறையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய்த் தங்கி நிற்பது போன்ற உணர்வே ஏற்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மக்களுடனேயே தங்கி, அவர்களின் கஞ்சியையோ, கூழையோ குடித்துவிட்டு, அவர்களுடன் கதைத்து, அவர்களின் கஷ்ரங்கள், துன்பங்களை நேரடியாகவே கேட்டு, நேரடியாகவே பார்த்து அறிந்து, பின் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து, நடைமுறைப்படுத்துவதே எமது இந்தப் பயணத்தின் பிரதான நோக்கமாகும்.

நாம் பிரான்பற்று, நிச்சாமம் எல்லையில் போய் இறங்கியதும் சிறுவர், இளைஞர், முதியவர் எனப் பலதரப்பட்டவர்கள் எம்மைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களில் ஒரு பெண்கூட இல்லாதது, மனதில் ஏதோ.....

ஒவ்வொரு குடிசை, குடிசையாகப் போனோம். அங்கு தங்கி நின்ற மூன்று நாட்களுக்குள்ளும் எத்தனை பெண்களைச் சந்திக்க முடியுமோ, அத்தனை பேரையும் சந்தித்தோம்; கதைத்தோம்.

அப்போதுதான் அந்தச் சிறுமி சொன்னாள்.

"அப்பா எங்களை விட்டுட்டுப் போட்டார். அம்மா தோட்டத்துக்கு மிளகாய்ப்பழம் புடுங்கப் போய்ட்டா. மத்தியானம் வந்து பாண் வேண்டித் தருவா. பிறகு பின்னேரம் போய்விடுவா. எனக்குப் பிறகு மூண்டு பேர் இருக்கினம். அவையளை நான்தான் பார்க்கிறது. அதாலதான் பள்ளிக்கூடம் போறதில்லை."

நாம் சந்தித்த பெரும்பாலான சிறுமியர்கள் இப்படித்தான். தமது மூக்கிலிருந்து வடியும் சளியையே துடைக்கத்தெரியாத நிலையில், இடுப்பில் இன்னுமொரு குழந்தையைச் சுமந்தவாறு....

காலையில் வேலைக்குப் போகும் தாய்மார் சிலர் மதியம் வருவதில்லை. ஒரேயடியாக நின்று வேலைசெய்துவிட்டு மாலையில்தான் வருவார்கள். அவர்கள் வரும்வரை குழந்தைகள் பட்டினியுடன் காத்திருக்கும். பின்னர் படிப்புதெப்படி? இது ஒரு பக்கம். இதன் இன்னொரு பக்கத்தையும் நாம் சந்தித்தோம்.

நாம் போனபோது சமைத்துக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணிடம்,

"பள்ளிக்கூடத்துக்குப் போகேல்லையோ?" என்றோம்.

"........."

அவர் எதுவுமே சொல்லவில்லை. அதற்குள் எம்மைப் பார்ப்பதற்கென அங்கு வந்த பக்கத்துவீட்டு அம்மா சொன்னார்.

"பிள்ளையள், அவளுக்கு அம்மா இல்லை. இவள்தான் குடும்பப் பொறுப்பு."

இப்படித் தாய்மார் இல்லாததால் அல்லது தாய்மார் வேலைக்குப் போனால், குடும்பப் பொறுப்பை ஏற்கும் வயது வந்தால், இவர் போன்ற இளம்பெண்கள் வீட்டிலிருந்து சமைக்கிறார்கள். அதனால் பாடசாலைக்குப் போவதில்லை. இது மறுபக்கம்.

ஆனால் எல்லோருமே கல்வியைப் பற்றி, அதன் முக்கியத்துவத்தை அறியாதவர்களல்ல. சில யுவதிகளுடன் கதைத்த போது, அவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் இருந்தும், படிக்க முடியாமல் போனதற்காகக் கவலைப்படுவது தெரிந்தது. ஒரு பெண் சொன்னார்:

"நான் ஒரு வகுப்புக்கூடப் படிக்கேல்லை. எங்கட அப்பா சரியாகக் குடிச்சுப்போட்டு வந்து, அம்மாவை அடிப்பார்; அஞ்சு தரம் வெட்டியும் இருக்கிறார். அம்மா வெட்டுப்பட்டு ஆசுப்பத்திரி, அங்க, இங்க எண்டு திரிஞ்சதில எங்களுக்குச் சரியான கவனிப்புமில்லை; சாப்பாடுமில்லை; பள்ளிக்கூடத்துக்குப் போகவுமில்லை. படிக்கேல்லையே எண்டு இப்பதான் கவலையாகக் கிடக்கு. நான் ஏன் இப்படிப் பிறந்தனான் எண்டுகூட நினைக்கிறனான்.

இப்ப நான் பன்ன வேலைகள் செய்யிறன். ஆனா ஒரு இடமும் போறதில்லை. அப்பா வருத்தம் வந்து செத்திட்டார். அம்மா சந்தைக்குப் போட்டா. அவ இப்பதான் வெட்டுக் கொத்து இல்லாமல் இருக்கிறா."

இன்னொரு யுவதியிடம் அவரைப் பற்றிக் கேட்டதற்கு,

"நான் பள்ளிக்கூடம் போனனான். எங்கட ஊரிலை ஏழாம் வகுப்பு வரைக்கும்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படிக்கலாம். அதுக்குமேலே படிக்கிறது எண்டா பண்டத்தரிப்புக்கு, இல்லாட்டிச் சங்கானைக்குத்தான் (இவர்களின் கிராமத்திலிருந்து ஏறத்தாழ 23 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள இடங்கள்) போகவேணும். அப்பிடிப் போறதுக்கு எங்களுக்கு வசதியில்லை. அதோட ஏழாம் வகுப்புப் படிச்சு முடிய நான் பெரிசாயிட்டன்.'' என்றார்.

இன்னொரு பெண்,

''எனக்கு நெஞ்சு வருத்தம் எண்டதால பெரிய வேலை ஒண்டும் செய்யேலாது. ஏதும் சின்னக் கூலிவேலைக்குப் போகலாம் எண்டாலும், இஞ்ச பெரிசான பொம்பிளையள் வெளியிலை போறதில்லை. ஆம்பிளைத் துணையில்லாமப் போகவும் ஏலாதுதானே?'' என்றார்.

பெண்கள் பருவமடைந்தபின் வீட்டுக்கு வெளியே போகாத ஒரு பழக்கம், பெரும்பாலான இடங்களைப் போன்று இங்கேயும் கடைப்பிடிக்கப்படுகின்றது. மனித குலம் தனது அடிப்படைத் தேவைகள் யாவும் பூர்த்தியான ஒரு நிலையில்தான் தனது அடுத்த கட்ட வளர்ச்சியைப் பற்றி யோசிக்கும். அடிப்படைத் தேவைகளில் ஒன்றுகூட நிறைவில்லாத நிலையில் வாழும் இவர்கள் பருவமடைந்தபின் வெளியே வருவதைப்பற்றி யோசிக்காததில், வராததில், தன்னம்பிக்கை அற்றிருப்பதில் வியப்பேதுமில்லைத் தான்.

கூலிவேலை முடிந்து திரும்பி வந்துகொண்டிருந்த ஒரு அம்மாவிடம்,

''எங்கையம்மா போட்டு வாறீங்கள்'' என்றோம்.

''மிளகாய்ப்பழம் புடுங்கிப் போட்டு இப்பதான் வாறன்'' என்றார்.

''ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளமம்மா வரும்?''

''காலமை எட்டுமணிக்குப் போய் மத்தியானம் பன்னி



ரெண்டு மணிக்கு வர 20 ரூபா. பின்னேரம் மூண்டு மணிக்குப் போய் ஆறுமணிக்கு வர 15 ரூபா. ஒருநாளைக்கு எல்லாமா முப்பத்தைஞ்சு ரூபா தருவினம். என்ன பிள்ளையள் செய்யிறது? ஒரு கிலோ அரிசி வேண்டத் தானும் காணாது.''

அவரோடு தொடர்ந்து கதைத்த போது, இராணுவ நெருக்கடிகளால் தோட்டம் செய்பவர்களே குறைவு என்றும், அதனால் பலருக்கு வேலை யில்லை என்றும், இப்படியான சூழ்நிலையில் தனக்கு வேலை தந்து, முப்பத்தைந்து ரூபா சம்பளம் தரும் தனது முதலாளி மிகவும் நல்லவர் என்றும் குறிப்பிட்டார்.

* * *

சாதாரணமான, எழுதப் படிக்கும் அறிவைக்கூடப் பெறாமல், இடுப்பில் இன்னொரு குழந்தையைத் தூக்கித் திரியும் சிறுமிகளும் பருவமடைந்தபின் வீட்டுக்குள்ளேயே வாழும் யுவதிகளும், தமக்கு ஊதியத்தில் பாகுபாடு காட்டப்படுவதை உணராது, முதலாளி வர்க்கத்தைப் போற்றும் அம்மாக்களும்..... நாங்கள் போகவேண்டிய தூரம் அதிகம் என்பதையும், தூரத்தைக் கடப்பதற்கு மிக வேகமாக, ஆழமாகச் செயற்பட வேண்டிய அவசியத்தையும் உணர்த்தினார்கள்.

மூன்று நாட்கள் தாய் மடியில் அமர்ந்து, அவளது துன்பங்களைத் தெளிவாக அறிந்துகொண்டு விடைபெற்றோம். அம்மா இருட்டில் இருப்பது மனதை உறுத்தியது. நாங்கள் எங்கோ கவனமில்லாமல் இருந்துவிட்டது போன்ற உணர்வு நெஞ்சை ஆக்கிரமித்தது.

மீண்டும் விரைவில் அவளிடம் போவோம்; வெறுங்கையுடன் அல்ல; சுடர்விட்டு எரியும் விளக்குகளுடன்.

**நன்றி சுதந்திரப் பறவைகள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




திலீபா.....
தமிழினத்தின் அகராதியில்
தியாகத்திற்கு இணையான
தமிழ்ச் சொல் இல்லாதபோது
இணையில்லா சொல்லாய்,
பொருளாய்ப் பதிந்து-
தமிழினத்தின் இதயங்களைக்
கவர்ந்தவன் நீ.

திலீபா.....
மானுடம் அன்றாடம் அஞ்சும்
மரணத்தையே தொட்டவன்;
இல்லை... இல்லை...
ஆரத் தழுவி,
முத்தமிட்டு மகிழ்ந்தவன் நீ.

திலீபா
கைகளில் பூட்டப்பட்டிருக்கும்
விலங்கறுக்க எண்ணாமல்
கழுத்தில் விழும்
மாலைகளையே எண்ணி மகிழும்
தமிழினத் தலைமைச் சூழலில்
மரணத்தையே மாலையாய்
அணிந்து மகிழ்ந்தவன் நீ.

திலீபா.....
சொட்டு நீர் அருந்தா
விரதமிருந்து
தமிழினத்தின் விடுதலைக்கு
நீர் பாய்ச்சியவன் நீ.

திலீபா......
விழியையும் செவியையும்
சேர்த்தடைத்த பசியைக் கூட
மரணத்திற்கு விருந்து சமைத்து
தமிழீழ விடுதலைக்குப்
பெரும் மருந்தானவன் நீ

திலீபா.....
கடந்த காலத்தின் உன்
சின்ன... சின்ன...
நினைவுகள் கூட
எங்களுள் பெரும் விருட்சமாய்
வளர்ந்து,
விழுதுகளும் விடுகின்றன.

திலீபா......
மண்ணுக்குள் நீ
புதைக்கப்படவில்லை;
தமிழீழ விடுதலைக்காக
விதைக்கப்பட்டிருக்கிறாய்.

திலீபா.....
நீ கையளித்துச் சென்ற
நம் தமிழீழ விடுதலையை
நோக்கி 'தம்பி'யின்
புலிப்படை
முன்னேறிக்கொண்டு
திசையெங்கும்
வெற்றி முகம் கொள்கிறது.

திலீபா......
'தம்பி'யின் புறநானூற்று
வீரத்தை மூடிமறைக்க
புழுதிக் காற்றுக்கள்
சுழன்றடித்தாலும்,
தமிழ்ப்பகை அழித்து
'தம்பி' புதிய புறநானூறாம்
"புலிநானூறு" சமைக்கிறான்.

திலீபா......
எங்கும் நீ மறையவில்லை
எங்களுள் புதிதாய் பிறந்து
உயிரில்... உணர்வில்.....
ஒன்றாய்க் கலந்து
எங்களையே இயக்கும் மூலம் நீ.

திலீபா......
கத்தும் கடல்
பிரித்து வைத்த
தாய்த் தமிழகத்து இளைஞன் நான்.
உன் நினைவுகளை
அசைபோட்டு.... அசைபோட்டு
கைபிசைந்து கையறு நிலையில்
கண்ணீர் வடிப்பதன்றி
வேறு வழி எதுவும்
எனக்குப் புலப்படவில்லை.

திலீபா....
காற்றில் கரைந்து
தமிழுலகம் முழுமையும்
நீக்கமற நிறைந்திருக்கும்
உன் கால்களைத் தேடி
என் முத்தங்களை
காணிக்கையாக்குகின்றேன்.

திலீபா......
மரணம் என்பது
வீரர்களுக்கில்லை.
அது கோழைகளின்
பொதுவுடமை.
உனக்கு எப்போதும்
மரணம் என்பதே இல்லை
தமிழீழத் தாயகத்தில்
விடுதலை வெற்றிக்களிப்பில்
மீண்டும் உயிர்த்தெழுவாய் நீ.

திலீபா..... திலீபா.....
.... திலீபா.... திலீபா...
உயிர்த்தெழுவாய் நீ....
.....உயிர்த்தெழுவாய் நீ....
உயிர்த்தெழுவாய் நீ.....
திலீபா..... திலீபா....

நெடுஞ்செழியன்
தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்கை லொறி சீதனத்திற்கு

மாவீரர் துயில் கொள்ளும் இல்லம். அந்த மாமணிகள் தம் அழியாத உடல்கொண்டு உரையாடுகின்றனர்.

இன்று மீண்டும் ஒரு வியப்பு; மகிழ்ச்சிப் பெருக்கு!

"உண்மையாடி? அப்படிச் செய்தாளா?"

"செய்ய நினைத்தாள்; செய்யவில்லை"

"ஏன்?"

"அதுதான் பெண்ணினத்தின் சாபக்கேடு"

எழுந்த வியப்பும் மகிழ்வும் மங்கிக் குறைந்தன. ஆனால் ஒரு மௌன உறுதிப்பாடு மேலும் சுடர்விட்டது.

"கலங்காமல் சொல். அம்மா நடந்ததை விரிவாகச் சொல்" கூட நின்ற மறவனின் குரலும் கலந்துகொண்டது; கணீரென்றன ஏனைய திலகங்களின் குரலும்.

"அது நடந்தபின் சில காலம் களமாடியே இங்கு வந்தேன். ஆனால் அந்த அநீதியை, அக்கிரமத்தை மறக்க முடியாது!"

"அதைத்தான் சொல்லடி!" உரிமைக்குரல்கள் மேலும் இடித்தன.

"அது அரசியற் களமல்ல. எம் சமுதாயக்களம். அந்நிய எதிரியிலும் கூடிய கொடுமை இங்கு தான்!"

"சொல் நீ"

"அங்கு எம் ஊரில் ஒரு கல்யாணம்!

சாதகம் பார்த்து, பெண்ணின் நிற வடிவு பார்த்து,

அந்த ஆண்மையற்ற மாப்பிள்ளைக்கு வீடு, காசு பல இலட்சம், நகையாக பவுண் பல சேர்த்துக் கொடுத்து,

வேதம் ஒலிக்க, மேளம் முழங்க, இதற்குள் கொடுத்த நகையில் ஏதோ குறை என உள்ளே குழப்பம் எழ,

கூடப்பிறந்த தங்கை தன் கைக்காப்பைக் கழற்றிக் கொடுத்தாளாம்!"

"பின் என்ன நடந்தது?"

பெண்ணின் கழுத்தில் அவன் தாலி கட்டக் குனிந்த அந்த வேளையில்தான், நெஞ்சம் குமிறி நின்ற தங்கை கூவினாளாம்.

'அதை அக்கா, நீ அவன்

## குரலெடுத்துப் பாடிய குயிலே...

குரலெடுத்துப் பாடிய குயிலே ஈழக்
கொள்கைதனை மாற்றாதமயிலே
மறவர் குலத்திற் தோன்றிய மாணிக்கமே
மணித்தமிழ்த் தாயீன்ற மணிக்குன்றே
கனித்தமிழ்த்தாயின் கைவிலங்கினை
களைந்திடப் புறப்பட்ட காவியநாயகனே!

விடுதலை வித்திட்ட வெண்ணிலவே
படுகளமாடிய பாயும் புலியே
வடுக்களை வயிற்றிலே சுமந்த வைகறைப் பொழுதே
கடுகளவும் உண்ணாமல் வயிறுதனில்
தீமூட்டிய தென்றலே
திலீபனே, தியாகச் சுடரே!

உண்ணாமல் உனதுவுயிர் ஆடியது தமிழர்
உள்ளமெல்லாம் துயரத்தில் வாடியது உன்னை
கண்ணாலே பார்த்துவிட
கடல்போல் மக்கள் வெள்ளம்
கந்தனவன் திருக்கோயில் நாடியது!

மெல்ல, மெல்ல உன் மூச்சடங்க உன்
மேனியைப் பசித்தீ கொல்ல உன்
மேல் விழி மேய்ந்திருக்கும் மக்கள் கூட்டம்
காந்தியம் பேசியோர் வாராரோ
வந்தொரு சேதி கூறாரோவென்று பார்த்திருக்க
உன் மூச்சு நின்றது; முடிவொன்றைத் தந்தது
மீட்டெடுங்கள் தமிழீழமென்று!

இ. சம்பந்தன், ஜெர்மனி (ராட்டிங்கன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கழுத்தில் கட்டு'

"அப்போ?" ஆவற்குரல் ஒன்று இவ்விதம் துடித்தது.

"மணப்பெண்ணும் தன்னுள் இதனையே எண்ணினாள்; ஆனால் செய்யவில்லை. குனிந்த பெண்ணாகவே இருந்தாள்!

ஆனால் மணப்பந்தல் கெம்பிற்று! பெண்வீட்டார் குனிந்த பதுமைகளாயினர். ஆண் வீட்டார் இரணியர் ஆகினர். தரகர் உட்பட!"

"பின் என்ன நடந்தது?"

கெஞ்சிக்கூத்தாடிய பெண்வீட்டாரை ஏசிவிட்டு, பெற்ற சீதனத்துடன் கட்டிய பெண்ணையும் இழுத்துச் சென்றானாம் மணமகன். தனது பெற்றார் சுற்றத்துடன்!

இனி அவள் அந்த வீட்டுக்கு வேலையாள்; நிரந்தர அடிமை தான்.

"பிரலாபம் வேண்டாம், செய்ய வேண்டியதைச் சொல்!"

மாவீரரின் முழக்கம் இவை!

இவ்வேளை ஒரு தரகர் தவறுதலாக விட்ட காகிதத்துண்டு காற்றிலே பறந்து, அதிலிருந்த குறிப்பு

1. வெளிநாட்டு மாப்பிள்ளை. வடிவான பெண்ணாக இருக்க வேணும். பதினைந்து லட்சம் கொடுத்தால் எடுக்கலாம்.

2. பெடியள் பலர் சண்டையிலை செத்ததாலை இங்க உள்ளவை பெருங் கிராக்கி எழுப்பினம். எண்ணாத சீதனம் கொடுத்தால்தான் மாப்பிள்ளை எடுக்கலாம். எண்டாலும் பார்ப்போம்....

"துரோகிகள்! பேடிகள்!" என முழங்கியது அந்த புனித சூழல். "இதற்கு வழியென்ன?" என மேலும் ஒரு ஆர்த்தல் முழக்கம்.

அந்த புதிய வனிதையே பதில் சொன்னாள்.

"அன்று இதனை இடித்துக் கூவியதற்கே என்னை அக்காவின் மணப்பந்தர் ஒதுக்கியது. ஆனால்"

"அந்தத் தங்கை நீதானா?"

"ஆமாம். ஆனால் அது பெரிதல்ல. இனிச் செய்ய இருப்பதைச் சொல்கிறேன்."

"சொல்! சொல்!" என்றன அனைத்தும்.

"இதுபற்றி நெடுகப் பேசிவரும் பிரச்சாரர்களை இனித் தூணில் கட்டிவிட்டு.. செயல் வெளி வரட்டும்; தீவிர செயல்! தீயதைத் தகர்த்தெறியும் நடைமுறை!"

"அதற்கு?"

"ஒற்றைத் துவக்கும் கட்டுத் துவக்கும் போதாது, 'சிங்கிள் சொட்'டும், 'ஓட்டோ அடி'யும் போதாது! சீதனத் தகர்ப்பிற்கு இனி வேண்டுவது சக்கை லொறிதான்!"

"ஆம், சக்கை லொறிதான்!"

மாவீரர்களின் ஒருமித்த ஒலி இவ்வாறு எழுந்தது. எம் இதயத்திலும் இது கேட்கிறது அல்லவா?

நாக பத்மநாதன்

நன்றி:விடுதலைப் புலிகள்

# சக்கை

எலும்பும் தோலுமாய்க் கிழட்டுப் பசு ஒதுக்குப் புறத்தில் கவனிப்பாரற்றுப் படுத்திருந்ததை வெள்ளாடு கவலையோடு நோக்கியது.

பசுவைப்பார்த்து, 'முன்பெல்லாம் உன்னை வீட்டுக்காரன் நாள் தவறாமல் குளிப்பாட்டுவானே புல்லும் வைக்கோலும் போட்டுத் தடவிக் கொடுப்பானே இப்போது திரும்பிக் கூடப் பார்ப்பதில்லையே ஏன்?' என்று கேட்டது ஆடு.

பசு பெருமூச்சு விட்டது.

'பயனில்லை அதனால் பார்ப்பதில்லை' என்றது பசு.

சுருக்கமாக அது சொன்னது:

**மடியில் பாலும் இல்லை**
**மதிக்க ஆளும் இல்லை'**

# உயர்வு

இரவின் பிடியில் அழுந்திக் கண்ணீர் விட்டது வானம்.
கண்ணீர் பனித்துளிகளாய் விழுந்தபோது வானத்தின் துன்பத்தை எண்ணி வருந்திய பசும்புல் கண்ணீர்த் துளிகளை தாங்கிக் கொண்டே வந்தது.
ஒவ்வொரு நாளும் புல் ஓங்கி வளர்ந்தது.
பரவி உயர்ந்து எங்கணும் பச்சைக் காடாய் நிறைந்தது பசும்புல்.
காலைக் குருவி பாடியது:
**'ஏங்குவான் கண்ணீரைத்**
**தாங்குவான் உயர்வான்'**

-காசிஆனந்தன்-

www.tamilarangam.net

# லலித் அத்துலத்முதலி நரகத்திற்குச் சென்றிருப்பாரா ?

**நிலாந்தன்**

வரலாறு எமக்குக் கற்பிக்கின்றது.

மனிதன் வரலாற்றிலிருந்து எதையுமே கற்கவில்லை.

- ஹெகல் -

என்னிடமிருந்து விலகிச் சென்றவர்கள் நரகத்திற்குத்தான் செல்வார்கள்.

- ஜனாதிபதி பிரேமதாசா -

லலித் அத்துலத் முதலியின் பல்கலைக்கழக நண்பர் டேவிற் செல்போர்ண், 83 யூலைக் கலவரத்தின் பின் கொழும்பு வந்திருந்தார். அப்பொழுது லலித், ஜெயவர்த்தன அரசின் தேசிய பாதுகாப்பு மந்திரியாக இருந்தார். செல்போர்ண் லலித்துடனான சந்திப்பின் போது அவரிடம் கேட்டார்: "தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன?" லலித்திடமிருந்து எத்தகைய தயக்கங்களுமின்றி உடனடியாகவே பதில் வந்தது: "தமிழர்களின் மண்டையை உடைப்பது."

அவர் நம்பிய, நியாயப்படுத்திய, தலைமை தாங்கிய ஒரு அரசியல், மண்டைகளை உடைக்கும் அரசியல், இறுதியாக அவரையே பலியெடுத்துவிட்டது.


கிருலப்பனையில் திரண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர் சுடப்பட்டார். அப்பொழுது, கொழும்பில் மழை கடுமையாய்ப் பெய்துகொண்டிருந்தது.

அவரது நெஞ்சைப் பிளந்து சென்ற குண்டுகளிற்கு இதுவரை யாரும் உரிமை கோரவில்லை. சிங்களவர்களின் அரசியல் உரிமை கோரப்படாத கொலைகளின் அரசியலாக எப்பொழுதோ மாறிவிட்டது.

இனி 'சண்டே ஒப்சேவ'ரில் "சிலுமின"வில் கார்ட்டுனிஸ்ட் ஒப்பாதாவின் மூர்க்கத்தனமான தாக்குதல்களிலிருந்து அவருக்கு நிரந்தரமாக விடுதலை.

தயான் ஜெயதிலகாவின் கீழ்த்தரமான விமர்சனங்களிருந்தும் நிரந்தரமாக விடுதலை.

ஒரு சட்ட வல்லுனராக இலங்கைக்கு வெளியில், சிங்கப்பூர், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பிரகாசித்துக்கொண்டிருந்த லலித்தை, ஜெயவர்த்தன, 84 மார்ச்சில் மண்டைகளை உடைக்கும் ஒரு பாதுகாப்பு மந்திரியாக உருவாக்கினார். அதற்கு முன்னரும், பின்னரும் லலித் தனக்குத் தரப்பட்ட அமைச்சுக்களில், அவர் அறிமுகப்படுத்திய புதிய திட்டங்களில், மகாபொலவிலிருந்து தொலைக்கல்வி முறை போன்றவை வரை தனது நிபுணத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். பாதுகாப்பு அமைச்சைத் தவிர, ஏனைய பிற அமைச்சுக்களில் உலகின் நவீன போக்குகளுடன் சேர்ந்துவிடத் துடிக்கும் அவரது சிந்தனைகள், அவரை நிறையத் திட்டங்களைத் தன் தலைக்குள் வைத்திருக்கும் ஒரு மந்திரியாக இனங்காட்டின. ஆனால், பாதுகாப்பு அமைச்சில்தான் அவரது நிபுணத்துவம் விரயமாகியது. ஈழப்போர் அவரை மிகவும் அவமானப்படுத்தியது. அது அவரது ஏனைய சாதனைகளையும் மங்கச் செய்தது. விமர்சகர்கள் கூறுவது போல மூன்றாம் மண்டல நாடுகளின் மூளைசாலிகள் எப்படி உள்நாட்டு யுத்தங்களில் தமது சக்தியை வீணடிக்கிறார்கள் என்பதற்கு இலங்கைத் தீவில் லலித் ஒரு உதாரணம்.



லலித் அத்துலத்முதலி

தமிழர்கள் அவரை நினைவுகூரும்போது, பீப்பாக் குண்டுகளையும் சேர்த்தே நினைவுகூர்கிறார்கள். சிங்களவர்களில் அவரது எதிரிகள் அவருடைய முதல் மனைவியின் விவாகரத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள். அவரை அவர்கள் "அசிற் வீசுபவர்" என்று கூறுவதுண்டு. இந்தியர்களில் எம்.ஜி.ஆரின் பொலிஸ் கொமிஷனர் மோகன்தாஸ் தனது, எம்.ஜி.ஆர்: மனிதனும் ஐதீகமும் (M.G.R: The Man and the myth) என்ற நூலில் லலித்தை, அத்துலத் முதலை என்றே குறிப்பிடுகிறார்.

ஒரு சம்பிரதாய இராணுவமாக சுதந்திர தினங்களில் ரவைகளற்ற றைபிள்களோடு அணிவகுத்துச் சென்ற சிறீலங்கா இராணுவம், ஒரு போர்புரியும் இராணுவமாக மாறிய தருணத்தில் லலித் தேசிய பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவரது காலத்தில்தான் இராணுவம் நாட்டின் சகல வளங்களையும் உறிஞ்சியபடி வீங்க ஆரம்பித்தது. இன்று இராணுவத்தினுள் காணப்படும் தளபதிகளும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைநிலைத் தளபதிகள் அநேகரும் முன்பு லலித்துக்கு சல்யூட் செய்தவர்கள்தான். சிங்கள அரசியல்வாதிகளுள் இராணுவத்திற்குள் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சிலருள் லலித் பிரதானமானவர். ஈழப்போரில் இராணுவம் வீங்கிச் சென்றபோது, அதோடு சேர்ந்து அவரும் எழுச்சி பெற்றார். தனது குறுகிய 15 வருட கால அரசியல் வாழ்வில் சிங்களவர்களின் தேசியத் தலைவர்களுள் ஒருவராக அவர் உயர்ந்து சென்றதிற்கு ஈழப்போர் ஒரு முக்கிய காரணம்.

இந்திய இலங்கை உடன்படிக்கையை அவர் கடுமையாக எதிர்த்தார். உடன்படிக்கை கைச்சாத்தாகிய வைபவங்களில் கலந்துகொள்ளாத முக்கிய மந்திரிகள் இருவருள் அவரும் ஒருவர். (மற்றவர் பிரேமதாஸா) உடன்படிக்கை உருவாகிய பின், புதிய பாராளுமன்றக் கட்டிடத்துள் நிகழ்ந்த குண்டுவீச்சுச் சம்பவத்தில் லலித் படுகாயமடைந்தார். மரணத்தின் விளிம்புவரை சென்றவரை, தமிழரான ஒரு வைத்திய நிபுணர் காப்பாற்றினார். எனினும் அவர் கொல்லப்படும்வரை, அகற்றப்படாத குண்டுச்சிதறல்கள் சில அவரது உடலின் ஆழத்துள் புதைந்து கிடந்தன. தான் எந்த விமான நிலையத்தைத் தாண்டிச் சென்றாலும் அங்கு மெற்றல் டிடெக்டர்கள் அல்லது அவற்றை ஒத்த கருவிகள் தன்னுள் மறைந்து காணப்படும் உலோகச்சின்னங்களை இனங்காட்டிவிடுகின்றன என்று அவர் ஒருமுறை சொன்னார்.

மேற்படி குண்டுவீச்சுச் சம்பவத்தை நினைவுகூர்ந்து, பின்னர் அவர் எழுதிய கட்டுரை ஒன்று பின்வருமாறு அமைகின்றது. "வாழ்க்கையை எப்பொழுதுமே நாமாக இழந்துவிட முடியாது. அதை எம்மிடமிருந்து பறிக்க மட்டுமே முடியும்."

இக் குண்டுத்தாக்குதல் அவரது வாழ்வின் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்ததாக அஜித் சமரநாயக்க எழுதுகிறார். ஆனால், குண்டுச் சிதறல்களோடு வாழ நேர்ந்த பிறகும் கூட லலித், ஈழப்போரில் மண்டைகளை உடைக்கும் அரசியலைத்தான் வற்புறுத்தி வந்தார். இந்தியர்கள் தலையிட்டிருக்காவிட்டால், அவர் ஒப்பரேஷன் லிபரேஷனில் வெற்றி பெற்றிருப்பார் என்பது இன்னும் பல சிங்கள விமர்சகர்களின் கணிப்பாய் உள்ளது. ஆனால், ஒப்பரேஷன் லிபரேஷன்தான் இந்தியர்களை தீவுக்குள் வரவழைத்தது என்பதை அவர்கள் மிக வசதியாக மறந்துவிடுகிறார்கள்.

'சண்டே ரைம்ஸ்' லலித்திற்கு அஞ்சலி செய்து தனது ஆசிரியர் தலையங்கத்தில், சிறீலங்காவின் கலாச்சாரமானது, ஆயுதக் கலாச்சாரமாக, வெடிகுண்டுக் கலாச்சாரமாக, இரும்பு முஸ்டிக் கலாச்சாரமாக ஆகிவிட்டது என்று விசனப்பட்டிருக்கிறது. ஈழப்போரின் தவிர்க்க முடியாத தர்க்கபூர்வ வளர்ச்சிதான் இப்படி சிங்களவர்களின் அரசியலை, இறுதி வெற்றியை துப்பாக்கிக் குண்டுகளால் நிச்சயப்படுத்த முயலும் ஒரு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ஈழப்போரின் தர்க்கபூர்வ விளைவு தமிழர்களை மட்டுமல்ல, சிங்களவர்களையும்தான் இராணுவமயப் படுத்தியிருக்கிறது.

தமிழர்களின் மண்டைகளை உடைப்பதில் தொடங்கியது, அதன் வளர்ச்சிக் கட்டத்தில் சிங்களவர்களின் மண்டைகளை உடைப்பதில் போய் முடிந்திருக்கிறது.

ஈழப்போரில் கடந்த இரு தசாப்த காலங்களிலும் கொல்லப்பட்ட தமிழர்களின் மொத்தத் தொகையையும் விட அதிக தொகை சிங்களவர்கள் (சுமார் 60,000 பேர்) குறுகிய இரண்டு வருட கால எல்லைக்குள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து ஈழப்போரின் தர்க்கபூர்வ வளர்ச்சி, சிங்களவர்களை எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது என்பது தெரியவரும்.

விக்டர் ஐவன் கூறுவதுபோல திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை ஜெயவர்த்தன பறித்தபோது, அதில் லலித்தும் உடந்தையாக இருந்தார். பின்னர் ஜெயவர்த்தன தேர்தல் வழிமுறைகளிற்கூடாகவே தன்னை ஒரு டிகோல் பாணியிலான நெபொடிஸ்ற் ஆக உருவாக்கியபோது, லலித் அதில் சேர்ந்திருந்து லாபமடைந்தார். தவிர்க்க முடியாதபடி ஜெயவர்த்தன அரசின் கூர்ப்படைந்த வடிவமாக பிரேமதாஸா எழுச்சி பெற்ற போதுதான் அவரால் சகித்துக்கொள்ள முடியாது போயிற்று.

சிங்களவர்களின் அரசியலை இருமுனைப்போட்டியிலிருந்து மும்முனைப்போட்டிக்கு மாற்றக்கூடிய வீரியம் மிக்க மாற்றுத் தலைவராக உருவாகி வந்த லலித், முன்பு பாதுகாப்பு மந்திரியாக இருந்த காலத்தில் தனது படையாட்களின் மனித உரிமை மீறல்களைப் பற்றி அவர்கள் மத்தியில் கதைக்கும் போது, "தேங்காய்களை களவாய்ப் பிடுங்கத்தான் வேண்டும். ஆனால், பிடிபடாமல் பிடுங்க வேண்டும்" என்று கூறினார். கிருலப்பனயில் அவரைக் கொன்றவர்களும் அப்படித்தான் செய்திருக்கிறார்கள்.

சில லலித்தின் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் அரசியலைப் போல, சில தென்கிழக்காசிய நாடுகளின் அரசியலைப்போல, சிறீலங்கா அரசியலும் இன்று ஒரு மரணப்படை அரசியலாக (Death Squad Politics) மாறியிருக்கிறது. அல்லது, முன்சொன்ன 'சண்டே ரைம்சின்' ஆசிரியர் தலையங்கம் கூறுவதுபோல அரசியல் குற்றமயப் படுத்தப்பட்டுவிட்டது. (Criminalisation of Politics) இதில் முன்பு பாகிஸ்தானில் இராணுவ சர்வாதிகாரியாக இருந்த ஜெனரல் ஷியா உல்ஹக் ஒருமுறை கூறியது போல: "எவ்வளவுக்கெவ்வளவு உயர உயரப் போகிறமோ அவ்வளவுகவ்வளவு வீழ்ச்சியும் உண்டு. அரசியலில் இன்றியமையாத நபர் என்று எவருமே இல்லை."

***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியர்: கண்ணா

# எரிமலைக் குமுறல்

- உதயலட்சுமி -

## போராளியின் பேனாவிலிருந்து...

எத்தனை களங்கள்
கண்ட என்கால்கள்
செத்த நிலைபோல
சவமாகிக் கிடக்கிறதே

கனத்த கருவியை
தோளிலே சுமந்து
தொலை தூரம் எதிரியை
விரட்டிய கரங்கள்
துவண்டு துடிப்பின்றி
கனமிழந்து நிற்கின்றன
ஏறு நடையாய்

வீறுடன் நடந்தேன்
விண்ணை முட்டிடும்
வேகங் கொண்டேன்
ஒரு நொடிப் பொழுதில்
நாடியடங்கி
கட்டிலே கதியென்று
கலங்கித் தவிக்கிறேன்.

வளையாத பாதை
முடியாத பயணம்
நானோ முடியாமல் முடமாக....

மண் மீட்க மடிந்தோர்
இல்லத்தில் துயில்கிறார்
சாகாத பிணமாக
நானிங்கு நிலையானேன்.

வல்லூறுகளின் இரைச்சல்...
செல்களின் கூவல்கள்...
இருப்புக் கொள்ளாமல்
என் இதயம் தவிக்கிறது

வேட்டுச் சத்தங்கள்
கேட்கும் பொழுது
வெகுண்டெழ வேண்டும் போல்....
ஆனால் முடியவில்லை

என்தோழர் எல்லையில்
துயிலாமல் தூணாக.....
நானோ நள்ளிரவில்
தனியாக வெம்புகின்றேன்

உரத்த குரலில்
கானம் பாடுதற்கு
விருப்புக் கொண்டேன்
சத்தம் வரவில்லை

மடிந்தோனின் முன்னால்
மலரெடுத்து மண்டியிட
அது கூட முடியவில்லை
ஒரு சின்ன ரவையின் தழுவலால்
சலனமின்றிக் கிடக்கிறேன்.

ஆனால்........
எந்தன் உள்ளக் குமுறல்
எரிமலையின் குமுறல்போல்
ஆழ்கடலின் கொந்தளிப்பாய்......
அதனிலும் விட.......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம்

## அரையாண்டு அறிக்கை

சிங்கள அரசின் இனப்படு கொலைகளாலும், இராணுவப் படையெடுப்புக்களாலும் சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்களது சமூக-பொருளாதார நன்மை கருதிப் புலிகள் இயக்கம், சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில், ஒரு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் பிரதான நோக்கம், இடம்பெயர்ந்த மக்கள் தமக்கென ஒரு உறுதியான-தங்குநிலையற்ற-வாழ்வை அமைக்க உதவுவதுதான். 1991ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த வளர்ச்சித் திட்டம், இப்போது மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்களை அகதிமுகாம் வாழ்வு வாழச் செய்யாது, அகதிமுகாம்களை குடியிருப்புக்கள் போல மாற்றி, அந்த மக்கள் தன்மானத்துடன் சுயமாக உழைத்து-எவரையும் எதிர்பாராது வாழும்படி செய்ய இந்த அமைப்பு பாடுபடுகின்றது.

அண்மையில் இது, 1993 ஆம் ஆண்டுக்குரிய தனது அரையாண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதிலிருந்து சில முக்கிய தகவல்களைத் தொகுத்துக் கீழே தருகின்றோம்.

## வீடமைப்பு-புனர்வாழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு, வீடுகள் செய்வதற்கும், குடிசைகள் புனரமைப்பதற்குமென சுமார் 27 இலட்சம் ரூபாவை, சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டம் செலவிட்டுள்ளது. இது தவிர நிவாரணங்கள் என்றும், முதியோர், ஊனமுற்றோர், அநாதைகளுக்கென்றும் உதவித் தொகையாக சுமார் 23 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## சுயசார்புத் தொழிற்திட்டம்

இதன்கீழ் 700 குடும்பங்கள் சுமார் 13 இலட்சம் ரூபா வரையில் உதவிகளைப் பெற்றுள்ளன. இதில் 209 குடும்பங்கள் மீன்பிடித் தொழில் உபகரணங்களையும், 448 குடும்பங்கள் வியாபாரம் மற்றும் சிறு தொழிலுக்கான உதவிகளையும் பெற்றுள்ளன. இந்த 700 குடும்பங்களில் தென் தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த 364 குடும்பங்களும் வடதமிழீழத்தைச் சேர்ந்த 336 குடும்பங்களும் அடங்கும்.

## விவசாயத் திட்டம்

இத்திட்டம் வன்னிப்பகுதியில் தான் கூடுதலாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. கடனுதவி என்ற அடிப்படையில் இது அமைந்துள்ளது. குறைந்த விலையில் விதைகள், உரம், கிருமிநாசினி, மண்ணெய் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி 47 விவசாயிகளுக்கு மிளகாய்ச் செய்கைக்குரிய கடன் உதவிகளும், 26 விவசாயிகளுக்கு நிலக்கடலைச் செய்கைக்குரிய நிதி உதவிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதேவேளை முத்தையன்கட்டில் கூட்டுப்பண்ணையொன்றும் இயங்கிவருகின்றது. இதில் 25 குடும்பங்கள் தொடர்ச்சியாக நன்மை பெற்று வருகின்றன. அதேபோல உடையார்கட்டில் உள்ள மூங்கில் ஆற்றை மறித்துக் கட்டிய அணை ஒன்றின் மூலம், அப்பகுதியில் பயிர்ச்செய்கை பண்ணப் படுவதுடன் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த அணை 250 அடி நீளமானது.

## கல்வி

இடம்பெயர்ந்தோர் குடியிருப்புகள், மற்றும் பின்தங்கிய கிராமங்களில் சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டம் 60 படிப்பகங்களை அமைத்து, அவற்றிற்குப் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை ஒழுங்காக வரவழைத்து அந்த மக்களுக்கு அறிவுப்பணி புரிகின்றது. அதே வேளை இப்பகுதிகளில் 50 பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1000 பாலர்கள் கல்வி பயில்கின்றனர். 100 ஆசிரியைகள் கல்வி போதிக்கின்றனர். அத்துடன் 50 கல்வி வளர்ச்சிக் கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்த இரண்டு வேலைத்திட்டத்திற்கும் மாதம் ஒன்றிற்கு சராசரி ஒரு இலட்சம் ரூபாவை சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டம் செலவிடுகின்றது.

## வைத்திய நிலையம்

முல்லைத்தீவு மாவட்டத்தில், மாவீரர் வைத்திய நிலையம் என்ற பெயரில் ஒரு வைத்திய சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே மாதமொன்றிற்கு சராசரி 1000 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். அத்துடன் சூழல் சுகாதாரம் பேணல், கர்ப்பிணித் தாய், பாலூட்டும் தாய், குழந்தைகளுக்கான போசாக்குத் திட்டம் என்பனவும் நடைமுறையில் உண்டு. மாதமொன்றிற்கு 1000 பாலகர்களும் 100 தாய்மாரும் இப்போசாக்குத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓவியர் மார்க்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழத்தில் தலைசிறந்த ஓவியராக மாற்கு எண்ணப்படுகின்றார்.

இவரது ஓவியங்கள் எமது மண்ணின் எதார்த்த வாழ்வைச் சித்தரிப்பனவாகவும் போர்க்கால வாழ்வின் அவலங்களை தத்ரூபமாக வெளிப்படுத்துபவனாகவும் விளங்குகின்றன. அவருடைய ஓவியங்கள் தத்ரூபத் தன்மை வாய்ந்தவையாக இருக்கின்ற அதேவேளை நவீன ஓவியத்தன்மமையும் புகுத்தப்பட்டு அமைந்துள்ளன.

இம் மூன்று ஓவியங்களும் தமிழீழத்தில் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தவை ஆகும். இவ் ஓவியக் கண்காட்சியில் பல வளர்ந்து வரும் ஓவியர்களின் ஓவியங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவை நம்பிக்கையூட்டுவனவாகவும், போராட்டத்திற்குச் செழுமை சேர்ப்பனவாகவும் இருந்தன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குந்த ஒரு குடிநிலம்!

வெறும் சடப்பொருளான மண்ணுக்காக
எத்தனை சாவுகள்?
ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு
ஊடகமான மொழிக்காகவா
இத்தனை மரணங்கள்?
இப்படி அங்கலாய்ப்போர் இருக்கின்றனர்.
இந்தப் போரினால் இறந்து
போனவர்களுக்குள்ளே
எத்தனை 'பாரதிகள்'



எத்தனை 'மாக்சிம் கார்க்கிகள்'
எத்தனை 'டால்ஸ்டாய்கள்'
எத்தனை 'மார்க்கோனிகள்'
இன்னும்
'ஐசாக் நியூட்டன்கள்'
'மேரிகியூரி' அம்மைகள்
எத்தனை பேர் இருந்தார்களோ?
அத்தனைபேரும் அழிந்துவிட்டார்களே!
இப்படி மூக்கு நீர் சிந்தி
முட்டைக் கண்ணீர் வடிப்போருண்டு.
விரிந்த இந்த உலகமே
மனிதன் வாழ்வதற்காகத்தானே
இதில் தமிழனுக்கு தனிநாடு வேண்டுமா?

இப்படிக் கேட்போர் இன்றும்
இருக்கின்றனர்.
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு
முன்தோன்றியது தமிழென்றால்
அந்த முதற் தமிழன்
காலெடுத்து நடந்த நிலம் எது?
அவன் மலம் கழித்திவிட்டு கழுவியது
எதனால்?
இப்படி அங்கதம் கமழ ஆரவாரிப்போர்
உண்டு.
எல்லாவற்றையும் சேர்த்துக் கோத்தால்........
இவர்கள் எழுப்புவதும்
எதிரொலிப்பதுவும் என்ன?
சரியாக நிலம் வெளிக்காத
"இளம்காலைப் பொழுது"கள்
பகலாகாது இரவானது கொடுமையாம்.
சரி,
அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்.
ஆனால்.....
"உயிர்ப்புடன் பிறந்தவை யெல்லாம்
போராடுகின்றன"
இந்தத் தத்துவம்
இவர்களுக்கு மட்டும்
புதைந்துபோன செப்பேடுகள் ஆனது
ஏன்?
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்று
இவர்களுக்கு பாடம் கற்பித்த பரமபிதா
எவன்?
குருதி சொரியாது உரிமை பெற்றதுக்கு
ஒரு உதாரணம் சொல்லட்டும் பார்க்கலாம்.
'தமிழீழம்'
இவர்களுக்கு கனவாக இருக்கலாம்
கைகளில் எட்டாத வானமாக இருக்கலாம்
போராடும் எங்கள் மக்களுக்கு
கையள்ளி மகிழும் காலடி மண்தான்
எட்டிப்பிடிக்கக் கூடிய தாயின் மடிதான்
விரிந்த காலுடைய "கும்பிடு பூச்சி"களான

## உலைக்களம்

- வியாசன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களுக்கு
ஆபிரிக்கா அத்தை வீடாகவும்,
அமெரிக்கா அக்கா வீடாகவும் இருக்கலாம்.
எங்கே, இந்தச் சர்வதேச வாதிகள்
அத்தை வீட்டுக்குள்ளே.....
அனுமதியின்றி நுழையட்டும் பார்க்கலாம்?
இவர்களுக்கு
உலகம் ஒரே கூரையின் கீழ் உறங்குகிறதாம்
ஆனால்
கூரை ஒன்றானாலும்
குடியிருப்புக்கள் வேறு வேறு என்பது
இவர்களின் அகராதியில் மட்டும்
அச்சழிந்து போய்விட்டதா?
'தமிழீழம்' வெறும் மண்ணாகவா
இவர்களின் கண்களுக்குத் தெரிகிறது?
இந்த மண்ணில்தானே
எங்கள் நூறு தலைமுறையே புதைந்து
கிடக்கிறது.
முன்றடி தோண்டினால் போதுமே
நம் முன்னோர்களின் எலும்புக் கூடுகள்
தலை நிமிர்த்தும்
இங்கு வீசும் காற்று வெறும் காற்று மட்டும்
தானா?
எங்கள் பரம்பரையின் மூச்சும் அதில்
கலந்திருப்பது
இவர்களின் சுவாசத்துக்கு ஏன் தெரியாமல்
போனது?
முற்றத்தில் நிற்கும் பாலமரத்தைக் கீறினால்.....
வடிவது பால்மட்டும்தானா?
எங்கள் முந்தையரின்
குருதியும், வியர்வையும் கொப்பளிப்பது
இவர்களுக்கு மட்டும் ஏன் தெரியவில்லை?
எங்கள் கோவில் வீதிகள்
வெறிச்சோடிப்போன வெறும் வெளி
மட்டும்தானா?
யார் சொன்னது?
எமது பாட்டன் இராமன் வேடம் தரித்து
மேடையில் நின்ற போது
பாட்டி தன்னை சீதையாக உருவகித்து
மனதுக்குள்ளே.....
மாயமான் கேட்டு நின்ற மண்ணல்லவா?
எப்படி எங்கள் தாய்நிலமும்
அரபுப் பாலைவனமும் ஒன்றாக முடியும்?
இவர்களுக்கு எல்லைகள் தொல்லைகளாக
இருக்கலாம்;
ஆனால் எல்லாவற்றுக்கும் எல்லை
இருக்கின்றனவே!
கடலுக்கு நிலமும்
நிலத்துக்கு கடலும் எல்லைகள் ஆகும்போது
எங்கள் தாய்நிலத்துக்கு மட்டும்
வேலிகள் வேண்டாமா?
வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாட்டின்
பின்னர்
சாணிமெழுகிய திண்ணையில்
சரிந்து படுக்கின்ற இன்பம் இருக்கிறதே
இது இங்கின்றி
வேறு எந்த மண்ணில் ஏற்படும்?
தாய்மடிதானே சந்தோஷம்.
அழகில்லை என்பதற்காக
என்னைப் பெற்ற ஆச்சி
எப்படி அடுத்த வீட்டுக் கிழவி ஆக முடியும்?
அழகானவள் என்பதற்காக
அடுத்த வீட்டுக் கிழவி
என்னைப் பெற்றவள் ஆக முடியுமா?
ஊத்தை உடுப்பென்றாலும்
ஆச்சியுடன் ஒட்டியிருக்கும் சுகமிருக்கிறதே
அதைவிடச் சுகம் எதுவுமே இல்லை.
'சப்த சமுத்திரங்களு'க்கும் சொந்தம்
கொண்டாடும்
சர்வதேச வாதிகளுக்கு
மட்டக்களப்பு வாவியின் மகிமை தெரியாது
'நைல் நதி தீரமும்' நமதென்று
சொல்பவர்களுக்கு
கீரிமலைக் கேணியின்
ஊற்று நீரின் உன்னதங்கள் புரியாது.
'அல்ப்ஸ் மலை' அழகுதான்
அதற்காக
கோணமலை கோரமலை ஆகிவிடாது.
எங்களுக்கு.....
பாய்விரித்துப் படுத்துறங்கவும்
அச்சமின்றி ஆடிப்பாடவும்
குந்த ஒரு குடிநிலம்
சொந்தமாக வேண்டும்.
"எல்லை போட்ட கொல்லை"
இதுதான் எங்கள் குறிக்கோள்!

**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள தேசத்தை உலுக்கிய இராணுவத் தோல்விகள்

ஏறக்குறைய ஒருமாத காலத்தில் புலிகள் இயக்கம் படைத்த மூன்று பாரிய இராணுவச் சாதனைகளால், சிங்கள தேசமே ஆடிப்போயுள்ளது.

சிங்களப் படைகள் சந்தித்த இப் பின்னடைவுகளால், அரசும் ஒரு புதிய நெருக்கடி மிகுந்த சூழல் ஒன்றைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் ஒருமாத நிறைவுநாளை வெற்றிநாளாகத் தமிழீழ மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்த போது, கிளாலிக் கடலிலும் புலிகள் ஒரு வீரசாதனை படைத்துள்ளனர்.

கிளாலித் தாக்குதல் நடந்து நான்காம் நாள், வடமராட்சிக் கடலில் ஒரு 'டோறா' சண்டைப் படகை மூழ்கடித்து, புலிகள் மீண்டும் அளப்பரிய வெற்றியைப் படைத்துள்ளனர்.

நான்குநாள் இடைவெளிக்குள் அடுத்தடுத்து கடற்படையின் மீது நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்களினால், சிங்களக் கடற்படை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

'இதயபூமி 1' இராணுவ நடவடிக்கையினால் இடிந்து போயிருந்த சிங்கள தேசத்திற்கு, கிளாலிக் கடலிலும், வடமராட்சிக் கடலிலும் நடந்த கரும்புலித் தாக்குதல்கள் மேலும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளன.

இந்தக் கடற்தாக்குதல்களில் சிங்களக் கடற்படை சந்தித்த பாரிய இழப்புகளுடன் கடற்புலிகளுடனான நேரடிக் கடற்சண்டைக்குரிய துணிவையும் அது இழந்திருக்கும் என ஊகிக்கலாம்.

அதாவது, இனிமேல் ஒரு கடற்சண்டையின்போது புலிகளின் எந்தப் படகு துப்பாக்கிகளுடன் வருகின்றது? எந்தப் படகு வெடிமருந்துடன் வருகின்றது என்பதை ஊகிக்க முயற்சிப்பதே, கடற்படையினர்க்குப் பிரதான வேலையாக இருக்கும். அதனால், எந்தநேரமும் சிங்களக் கடற்படையினர் ஒரு திகிலுடனேயே இருப்பர். அத்துடன் இனிமேல் நடைபெறப் போகும் கடற்சண்டைகளில், புலிகளின் படகை நெருங்கித் தாக்குவதென்பது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று, சிங்களக் கடற்படையினர் எண்ணுவர். இந்த மனநிலை சிங்களக் கடற்படையினரின் துணிவையும், போரிடும் ஆற்றலையும் சிதைக்கும் என்று நம்பலாம்.

அதேவேளை, கடலில் நடந்த இக் கரும்புலித் தாக்குதல்களின் விளைவாக, சிங்களக் கடற்படையின் கடல்ரோந்துகள் பெரிதும் பாதிக்கப்படலாம். குறிப்பாக கிளாலிக் கடல் நீரேரியில் புலிகளின் கை மேலோங்கியிருக்கும் என்பதும், பொதுமக்களின் பயணத்திற்கு இது பேருதவியாக இருக்கும் என்பதும் குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

கிளாலித் தாக்குதல் நடைபெற்ற நாளன்று, பயணிகள் மீது ஒரு படுகொலை நடவடிக்கைக்குச் சிங்களக் கடற்படையினர் முயற்சித்தனர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

அன்றைய நாள்தான் மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் ஒருமாத நிறைவு நாளாகும்.

மண்கிண்டி மலையில் சிங்கள இராணுவம் சந்தித்த பேரிழப்புக்கு பழிவாங்கும் முகமாக முகாம் தகர்ப்பு நடந்த நான்காம் நாள், சிங்களக் கடற்படையினர் கிளாலியில் ஒரு படுகொலையைச் செய்தனர். அதில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர்.

அதேபோல் முகாம் தகர்ப்பின் ஒரு நிறைவுமாத நாளன்றும் பயணிகளைப் படுகொலை செய்து தமது சகாக்களின் இழப்புக்களை நினைவுகூர சிங்களப்படை முயற்சி செய்தது.

"கடற்படையினர் வந்த ஐந்து படகுகளையும் எமது படகுகள் வழிமறித்துத் தாக்குதலைத் தொடங்கியபோது, அவற்றில் இரண்டு படகுகள் திசைமாறி பயணிகள் படகுகளை நோக்கிச் செல்லத்தொடங்கின. அதில் ஒரு படகு மீதே கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது." கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையின் கூற்று இதை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, 'ஈழப்போர்2' என அழைக்கப்படும் இப்போர் ஆரம்பித்த நாளிலிருந்து சிங்களப் படைகள் சந்தித்து வந்த பாரிய உயிரிழப்புகள் காரணமாக, படையினரின் போரிடும் உறுதியில் பெருந்தளர்வு ஏற்பட்டிருந்ததை, சிங்களத் தளபதிகளே முன்னர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

பெருந்தொகையில் படையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டோடியதும் (சுமார் 8000 பேர்), படைக்கு ஆள் சேர்வதில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதும் ஏற்கனவே அறிந்த உண்மைகள். 1992ம் ஆண்டு இந்நிலை உச்சத்தில் இருந்தது.

ஆனால், இந்த (93ம்) ஆண்டு இது சீரடைந்துவிட்டதாகச் சிங்களத் தளபதிகள் மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர். படையை விட்டு ஓடுவோர் எண்ணிக்கை பெருமளவு குறைந்ததை இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர். ஆனால், இதன் உண்மை என்னவென்றால், இந்த ஆண்டின் நடுப்பகுதிவரை புலிகள் இயக்கம் தீவிரமான முறையில் தாக்குதல்களை சிங்களப் படைக்கு எதிராகத் தொடுத்திருக்கவில்லை என்பதேயாகும். அதனால் தான் சிங்களப்படையில் ஏற்பட்ட நெருக்கடிகள் சீரடைந்து வந்ததைப் போல ஒரு தோற்றப்பாடு நிலவியது. ஆனால், மண்கிண்டிமலை முகாம் தகர்ப்புடன், புதிய அத்தியாயம் ஒன்று தொடங்கி விட்டது என்பதை, அடுத்துவந்த கிளாலிக் கடற் தாக்குதலும், வடமராட்சிக் கடற்தாக்குதலும் சுட்டிக்காட்டுகின்றன.

இதனால், சிங்களப் படைக்குள் தணிந்திருந்த நெருக்கடிகள் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதன் ஆரம்ப அறிகுறியாக, மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்க்கப்பட்டதன்பின் சிங்கள தேசத்தில் நடந்த படைக்கான ஆட்சேர்ப்பில், மிகக் குறைந்தளவு சிங்கள இளைஞர்களே கலந்துகொண்டனர் என்ற பி.பி.சியின் செய்தியைக் கருத்திலெடுக்கலாம்.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பும், கிளாலித் தாக்குதலும், வடமராட்சிக் கடற்தாக்குதலும் கொடுத்த இராணுவத் தோல்விகள், கொழும்பின் அரசியலையும் பாதித்துள்ளன.

பிரேமதாஸா கொல்லப்பட்டபின் பதவிக்கு வந்த புதிய சனாதிபதி டி.பி.விஜயதுங்கா, இனித்தான் இராணுவத் தோல்விகளால் எழும் அரசியல் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கப் போகின்றார்.

**நன்றி:**
**விடுதலைப்புலிகள்**
**ஆவணி 93**

# புதிய ஒளி பாயட்டும்!

- டாக்டர் மா. நடராசன் -

நெஞ்சப் பேரேட்டில்
நீட்டிய
அச்சுக் கோர்வையின்
கண்ணீர்த் தழும்புகள்
கரையாமல் எரிகிறது...

உண்மைக் கலசங்கள்
உறியில்
உருகிச் சாய்கிறது...
வாசல் கோலங்கள்
விகாரமாய் அழுகிறது.....

வேர்வையினாலேயே
உலகத்தை
விதவிதமாய்ச் சமைத்தால்..
அது
கஞ்சியாய் வடிகிறது....

தலையணைகள் வேண்டாம்
இரத்தம்
தலைக்கேறுவதில்லை....
கட்டாந்தரையில்
கல்லுக்குள்ளும் படுப்போம்.....!

சாம்ராஜ்யக் குதிரை
இரும்பு லாடத்தைத் தான்
மிதித்து நடக்கும்....
சரித்திரம் அதுதான்.....

கதவுக்கு தாழ்பாள்
எதற்கு?
திறந்த வெளிக் கூட்டில்
எச்சில் இடாதீர்கள்....

ஆந்தை மினிறல்
அடியோடு தொலையட்டும்!
வானம்பாடி
ஆனை ஏறட்டும்!

பசுக் கூட்டம்
வண்டியை இழுக்கலாமா...!
புலியை இழுத்து வாருங்கள்
புதிய பாதையில்
பூட்டி ஓடுங்கள்

திமிங்கிலத்தை
சாட்டை ஆக்குங்கள்...

புதிய ஒளி பாயட்டும்...!
பூர்வீக ஜபர்தஸ்தா
புழுதி மண்ணாகட்டும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரசவம்



**புதியவன்**

மூடுபனிப் புகாருக்குள் அமிழ்ந்து அமைதியாக இருந்தது அந்தப் பிரதான வீதி. ஜீவநடமாட்டம் எதுவுமின்றி மௌனத்தின் போர்வைக்குள் அடங்கிப் பனியில் குளித்து வெறித்துக் கிடக்கும் அந்தப் பிரதான வீதியில் இலுப்பம் பூக்கள் சொரிந்தது போல, வெள்ளைப் பாவாடை விரித்து இருந்த பனிப்படலத்தின் மேல் கோடு கீறிச் செல்கிறது முரளியின் மோட்டார் வாகனம். மேல்மாடியில் நிற்கும் சுந்தரி ஜன்னலினூடாக வாகனம் போன திசையை லயித்துப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். இரவு முழுவதும் சுறுசுறுப்பாகவும், அட்டகாசமாகவும் இருந்த அந்தப் பிரதான வீதி இன்று வழமைக்குச் சற்று முன்னதாக அமைதியாகிவிட்டது. காரணம் இன்று விடுமுறைநாள். ஊரே விழித்துக்கொள்ளச் சற்றுத் தாமதமாகும். எங்கள் தமிழ்ச் சனங்கள் படுக்கையை விட்டு எழும்புவது என்றால் குறைந்தது பத்து மணியாகும். அதற்குள் போனால்தான் அவர்களை நித்திரைப்பாயில் பிடிக்கலாம். அதனால்தான் முரளி சாந்தியண்ணையை விடியப்பறம் ஐந்து மணிக்கு வரச்சொல்லி அவசரம் அவசரமாக வெளிக்கிட்டுப் போகிறான். எப்படியும் அவசர காலநிதிக்குக் குறிப்பிட்ட தொகை சேர்க்க வேண்டும். இருநூற்றைம்பது கிலோமீற்றர் தூரம் போகவேண்டும். அவர்கள் முன்சனைப் (Munchen) போய்ச் சேர குறைந்தது இரண்டரை அல்லது மூன்று மணித்தியாலங்கள் பிடிக்கும். வீதி ஒரே வழுக்கலாக இருக்கும். கவனமாக ஓடுவார்களா? சீச்சீ... சாந்தியண்ணை, அவரின் கார்தான் பெரியதே தவிர அவரின் ஓட்டம் நிதானம். எண்பதுக்கு மேலே மிதிக்கமாட்டார். முத்து என்றால் தான் பயம். ஒரே பகிடியும் தமாசும். கதையென்றால் கையிலுள்ள சுக்கானையும் மறந்து பின் ஆசனத்துக்கே வந்திடுவான். இதுவரை யன்னலினூடாக கார் போன பாதையைப் பார்த்து தனக்குள் ஆழ்ந்துபோன சுந்தரி அதிலிருந்து விடுபட்டு பக்கத்திலுள்ள சோபாவில் அமர்ந்தாள். அவளால் நீண்ட நேரம் நிற்கவோ, புரண்டு படுக்கவோ முடியாது. அந்த அளவுக்கு வயிற்றின் பெருப்பமும், அதற்குள் இருக்கும் குழந்தையின் பாரமும் அவளைத் திணற வைக்கிறது. ஆம்! அவள் நிறைமாதக் கர்ப்பிணி. நன்கு கனிந்த பழம். இன்றோ நாளையோ குழந்தை பிறக்கலாமென டாக்டர் கூறியுள்ளார். அதிலும் அவளுக்குத் தலைப் பிரசவம். முதல் அனுபவம். ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணுக்கும் தலைப்பிரசவம் என்கிறபோது உயிரையே பணயம் வைப்பது போன்ற ஒரு சோதனை. ஒரு மனப்பீதி. தன் பெற்றோருக்கு ஒரேயொரு பெண்பிள்ளை. அதிலும் செல்லப்பிள்ளை. அதனால் அவளுக்கு அந்தப்பயம் அதிகம் வருவதில் தப்பில்லை. அவள் இரவில் அனுங்கும் போதெல்லாம் முரளி சொல்வான், "சுந்தரி, நீ செல்லப் பிள்ளையாக இருந்து வளர்ந்தவள். இப்போ நாட்டில் இருந்திருந்தால் அம்மா, அப்பா, மாமா, மாமி என்று எத்தனை பேர் உதவிக்கு வருவார்கள். ஆனால் இங்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. கணவன் என்று சொல்லிக் கொள்ள மட்டும்தான் என்னால் முடியும். என்னைக் காதலித்துக் கலியாணம் செய்தாய். எந்தச் சுகத்தையும் நான் தரவில்லை. நான் எனது மண், அந்த மண்ணின் விடுதலை, எமது இயக்கம் என்று விடுமுறை நாட்களிலும் வீட்டில் இருக்காமல் வெளிக்கிட்டுத் திரிகிறேன். இங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழும் தமிழ்ப் பெண்கள் மாதிரி உனக்கும் நகை நட்டோ, உடுப்போ வாங்கித் தரவில்லை. உன்னை ஊர் சுற்றிக் காட்ட வில்லை. மாதம் ஒருமுறை இங்கு நடக்கும் தமிழ்ச்சினிமாவுக்கே கூட்டிப்போகவில்லை. நடுச் சாமத்தில் வந்து படுக்கிறன். விடியுமுன்னே வெளிக்கிட்டுப் போகிறன். என்ன செய்வது? என்னால் இங்குள்ள சாதாரண தமிழ் மகன் மாதிரி வாழ முடியவில்லை. அப்படி வாழ எண்ணினாலும் தமிழீழத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் வாசிக்கும் பொழுதும், செய்திகளைக் கேட்கும் பொழுதும் எனது நரம்புகள் விறுவிறுக்கிறது. யாராவது விடுதலை பெற்றுத் தருவார்கள்; நாம் போய்ச் சொகுசாக வாழலாம் என்று என்னால் ஒதுங்கியிருக்க முடியாது. நாம் பிறந்த மண்ணின் விடுதலைக்கு நான் என்ன செய்கிறேன் என்ற கேள்வி என்னை உறுத்துகிறது. ஏதோ ஒரு காரணத்தினால் வெளிநாடு வந்தவர்கள்தான் நாங்கள். நான் ஏன் வெளிநாடு வந்தேன் என்று உனக்குத் தெரியும்."

"சுந்தரி, மணியங்காட்டுப் பள்ளிக்கூடத்திலை நானும் நீயும் ஒன்றாகப் படித்தோம்; காதலித் தோம். எமது குடும்பங்களிலை இருந்த வர்க்க வேறுபாடுகள்தான் எமது காதலுக்குத் தடையாக இருந்தது. என்னைப் பொறுத்த மட்டில் அன்று எனக்கு இருந்த ஒரேயொரு இலட்சியம் எமது காதல். உன்னை நான் அடைய வேண்டுமென்ற அவா. அதற்காகத்தான் நான் வெளிநாடு வந்தேன். நான் வரும்போது எனக்கு எனது மண்ணின் மகிமை தெரியவில்லை. எம்மீது இருந்த இன ஒடுக்குமுறைகளை உடைக்க வழி தெரியவில்லை. எங்கள் வாக்குச்சீட்டின் மூலம் பதவிக்கு வந்த தலைமைகள், எம்மிடமிருந்த இன உணர்வை வளர்க்கவில்லை; வழிநடத்தவில்லை. அதனால்தான் வெளிநாடு வந்தேன். நான் வந்த பின்தான் எமது இனத்தின் விடுதலைப் புரட்சி வெடித்தது. இதுவரை தலைமறைவாக இருந்த விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போராட்டம் வெகுஜனப் போராட்டமாக உருவாகியது. ஏன் இனத்திற்கே தேசியத் தலைவன் உருவாகினான். ஒரு சரியான தலைமை; அதன் வழிநடத்தல் கிடைத்தது. நான் வெளிநாடு வரும் முன்பே இந்நிலைமை உருவாகியிருந்தால் எனது உணர்வுகள், சிந்தனைகள் சரியாக வழிநடத்தப்பட்டிருக்கும். ஒரு இயக்கக் கிளையின் மாநிலப் பிரதிநிதி; அதன் பகுதிப் பொறுப்பாளர் என்ற வகையில் என்னால் ஓய்ந்திருக்க முடியாது. செயற்பாடு இல்லையென குறைகள் வந்தாலும்கூட மேலும் மேலும் செயற்பட்டுக்கொண்டே விடை கூறவேண்டியவன். சுந்தரி, உனது பிரசவம், அதன் வேதனை, அதில் எனக்கும் பங்குண்டு."

"இந்த வேதனை உனக்கு மட்டும் உரித்தானது அல்ல. மனித இனத்திற்கே சொந்தமான ஒரு இயற்கை நிகழ்ச்சி. வெளிநாட்டில் தனிமையாக வாழும் உனக்கு அதில் முன் அனுபவம் இல்லாத உனக்கு அது சற்று கஷ்டமானதுதான். ஆனால் என்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த அவசரகால யுத்தநிதி சேர்க்கும் பொறுப்பு, அது இதைவிடப் பெரியது. எமது மண்மீட்புப் போராட்டத்தை அடுத்த தலைமுறைக்கென எமது குழந்தையின் தலையிலும் போடாது, அந்தச் சுமையை நாமே சுமக்க வேண்டுமானால், உனது பிரசவ வேதனையைவிட அவசரகால யுத்தநிதி சேகரிப்பது எனக்கு முக்கியமானது. இந்த வளர்ச்சியடைந்த நாட்டில் நீ தொலைபேசியைச் சுழட்டினால் அவசர உதவிக்கு வர எத்தனையோ அம்புலன்ஸ், அவசர உதவிகள் நிறைய உண்டு. ஆனால், நாம் பிறந்த மண்ணை மீட்க நிதி வேண்டும் என தொலைபேசி மூலம் கேட்டால், வீடுதேடிக் கொண்டுவந்து தரும் அளவிற்கு இங்குள்ள எமது தமிழர்கள் இன்னும் விழித்துக்கொள்ள வில்லை."

சுந்தரி தனது பிரசவ வேதனை ஏற்படும் போதெல்லாம் முரளி கதைத்த கருத்துக்களை நினைத்துப் பார்ப்பாள். அவன் இயக்கத்தில் வைத்திருக்கும் நம்பிக்கை, தலைமையில் வைத்திருக்கும் விசுவாசம், இன விடுதலைக்காக உழைக்கும் உணர்வுகள், இவை அத்தனையும் அவளது பிரசவ வேதனையின் ஒத்தனங்கள். அவள் தனக்குள்ளேயே சிந்தித்தாள். எனது முரளி எவ்வளவு மாறிவிட்டான். அன்று எனக்கு அவனிடம் பிடித்தது அவனது குறும்புத்தனம், முரட்டுக்கோபம், எடுப்பான தோற்றம், குழைந்து குழைந்து பார்க்கும் குறும்பார்வை. அன்றைய எனது இளமைக்கு அவனது இந்த இயல்புகள் இரைபோடுவதாக இருந்தது.

அன்று எமக்கென்று பெரிதாக ஒரு இலட்சியமோ, கருத்து ஆழமோ காணப்படவில்லை. ஆனால் இன்று, எனது

**போர்க்காலச் சூழலில் மாணவ சமுதாயத்தின் ஒளிமயமான எதிர்காலத்தில் அக்கறை கொண்டு, அவர்கள் கல்வி கற்பதில் ஏற்படுகின்ற தடைகளைத் தகர்த்து, ஊக்கமளிப்பதில் முன்னிற்கும் செயல்மகத் தானதே. குப்பிவிளக்கின் ஒளியில் கிடந்து பயின்று எமது மாணவர்கள் மிகத்திற மையான சித்திகளை எய்தினார்கள். மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட, யாழ். நாயன்மார்கட்டு சனசமுகநிலையத்தின் முயற்சியால் மகேஷ்வரி வித்தியாலயத்தில் இரவு நேரங்களில் மின் விளக்கு ஒளியில் 216 மாணவர்கள் கல்வி பயின்றுவருகின்றார்கள். மாணவர்களிற்கான சேவையைத் தனது பெரும் கடனாகக் கொண்டு, யாழ். நாயன்மார்கட்டு சனசமுக நிலையம் இயங்கிவருகின்றது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரளியிடம் உள்ள விடுதலை இலட்சியம், அதன் கருத்து ஆழம், இனப்பற்று இவற்றை எண்ணும் பொழுது இன்றுதான் எமது காதலுக்கு, கணவன் மனைவி வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் தெரிகிறது. வெளிநாடுகளில் அகதி என்ற பெயரில் அர்த்தம் தெரியாமல் அலையும் எத்தனையோ பெண்களின் கணவன்மார்களுடன் ஒப்பிடும்பொழுது, எனது முரளியின் இயக்கச் செயல்ப்பாடுகள் எனது மனதிற்கு ஒரு திருப்தியைத் தருகிறது. உண்மையிலேயே இன்றுதான் அவன் எனது இலட்சியக் காதலன். கருத்து ஒருமித்த கணவன். ஈழத்தின் நிலங்களில் வேண்டுமானால் மேடுபள்ளம் இருக்கலாம். ஆனால், மலர்ந்துவரும் தமிழீழத்தில் வர்க்க வேறுபாடுகள் இருக்காது. அவை பதுங்கு குழிக்குள் வற்றியே போய்விட்டன.

கிறிங்... கிறிங்....

தொலைபேசி ஒலித்தது. சுந்தரியின் பிரசவ வேதனைக்கு ஒத்தனமான அந்தச் சிந்தனைகள் கலைகின்றன. அவள் தனது இடது கையை ஊன்றி வலது கையை நாரிக்கு முண்டுகொடுத்து பக்குவமாக எழுந்து நடக்கிறாள்.

"கலோ....!"

"நான் முத்து...."

என்றைக்குமே ஏதாவது பகிடி விட்டபடி சிரித்துக் கொண்டு கதைக்கும் முத்து இன்று தொலைபேசியை எடுத்தவுடனேயே பொரிந்துகொட்டினான்.

"என்ன சுந்தரியக்கா, முரளி எங்கை போட்டான்? இங்கை பக்கத்து நகரத்திலை பிரதிநிதி கனடாவுக்கு போய்விட்டானாம். அதால சனங்களுக்குப் பேப்பர், புத்தகம் ஒழுங்காகக் கொடுக்கவில்லையாம். சனம் கத்துதுகள். ஒரு ஒழுங்கான பிரதிநிதியை வைக்கத்தெரியாதோ.... இவன் முரளி இதுகளைக் கவனிக்காமல்..... எங்க போட்டான்....!"

"முத்தண்ணா... ஏன் கொதிக்கிறியள்? பிரதிநிதி என்கிறது யார்? விடுதலைப் புலிகள் எந்தப் பிரதிநிதியையும் வானத்திலிருந்து பூப்போட்டு இறக்கவில்லை. ஏதோ பங்களிப்புச் செய்கிறவர்களிலை முன்வந்து செயற்படும் ஒருத்தனைத்தான் பிரதிநிதியாக்குகிறது. அதற்கு இயக்கத்தைக் குறை சொல்கிறதே. தலைமையும், செயலகமும் சரியாகத்தான் நடக்குது. ஒரு பிரதிநிதியிடம் கொடுத்த பொறுப்பை அவர் நடைமுறைப்படுத்திற முறையிலை சிலவேளை அவர் தவறலாம். இதற்காக அவரைத் தவறு செய்யச்சொல்லி தலைமை அவரை அனுப்பவில்லை."

"சனத்தின்ரை கதைகளைக் கேட்க எரிச்சல் எல்லே வருகுது. முந்தியும் அவசரகாலநிதி வாங்கின நீங்கள் பிறகு இப்பவும் வாறியள் என்று அலுக்கினம்...."

"எரிச்சல் வருகிது என்பதற்காக நாங்கள் அவர்களிற்கு பதில் சொல்லாமல் போகமுடியுமே. சனம் என்றால் நாலுகேள்வி கேட்கத்தான் செய்வினம்." "போனமுறை எல்லோரும் ஒருமித்து பங்களித்திருந்தால் இந்தமுறை சேர்க்கவேண்டிய நிலை வந்திருக்காது என்று சொல்லுறதுதானே."

சுந்தரி...

எவ்வளவு பொறுமையான பதில், ஆழமான கருத்து, அமைதியான பேச்சு. அவ இவ்வளவு பொறுமைசாலியாக இருப்பதால்தான் முரளியின் கோபத்தைச் சமாளிக்க முடிகிறது. அவனுக்கு கோபம் மூக்கு நுனியில் வந்துவிடும். ஒருமுறை முத்து பக்கத்தில் இருப்பதையும் பொருட்படுத்தாது சுந்தரியிடம் சீறிக் குதித்தான். "எங்க சுந்தரி நான் அடுக்கிவைத்த 'எரிமலை'ப் புத்தகங்கள். அவை எனக்கு உடனடியாக இப்ப தேவை....!"

ஒரு பூகம்பமே வந்ததுபோல் வந்த அவனின் அலறல், சுந்தரி மெதுமையான ஒரு புன்சிரிப்புடன் அவற்றை எடுத்து வந்தாள்.

"நீங்கதானே ராத்திரி படுக்கையிலை வைச்சு வாசித்தனீங்கள். இந்தாங்கோ...."

முரளியின் மூஞ்சையில் அசடு வடிந்தது. "சுந்தரி என்றால் சுந்தரிதான்...." அவன் அவளைச் சமாளித்தான்.

"வழியாதையுங்கோ"

"எனக்கு உங்களிடம் பிடித்ததே இந்த கோபம்தான்." அவள் அவனது ஒவ்வொரு அசைவையும் ரசித்தாள்.

கிறிங்.... கிறிங்...

மீண்டும் அந்த தொலைபேசி ஒலித்தது.

இம்முறை சுந்தரியால் அந்தத் தொலைபேசியை போய் எடுக்கவே முடியவில்லை. அந்தளவிற்கு அவளுக்கு இடுப்புவலி சற்று அதிகமாகிவிட்டது.

"கலோ..." சற்று அனுக்கம் கலந்த குரல்.

"நான் கலா பேசுறன். இவர், முரளியோட முன்சனுக்குப் போறன் என்றவர், இன்னும் காணவில்லை. அதுதான் உங்க வந்து கதைத்துக்கொண்டு நிற்கிறாரோ என்று எடுத்தனான்."

"இல்லையுங்கோ... இன்னும் அவர்கள் வரவில்லை."

"ஏன் சுந்தரி அனுங்கிறியள்?"

"மூச்சுவாங்குது எனக்கு."

பெண்களுக்கே உரித்தான அந்த பிரசவவலி, அதன் தாக்கத்தை அவள் விளங்கிக் கொண்டாள்.

"ஓ.... அப்படியென்றால் சுந்தரி உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போகவேணும். வெளிக்கிடுங்கோ. நான் வேணுமானால் அம்புலன்சுக்கு அடிச்சுச் சொல்லுறன்."

அனுபவத்துடன் கூடிய அந்த வார்த்தைகள்...

அம்புலன்ஸ் தனக்கே உரித்தான அந்த மின்னி மின்னி விளக்குடன் எல்லோரும் வழி விலத்தும் வண்ணம் ஒலி எழுப்பிக்கொண்டு, வேகத்தோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரைந்து வருகிறது.

அந்த எட்டுமாடிக் கட்டிடத்தின் 2ம் இலக்க அறையில், சில மணித்தியாலங்களாக நடந்த போராட்டத்தின் பின் சுந்தரி இப்போதுதான் கண் திறக்கிறாள்.

"திருமதி முரளி!" தாதி அவளை அழைத்தாள்.

"உங்களுக்கு இரட்டை ஆண் குழந்தைகள்."

அந்த மகிழ்ச்சியில் பிரசவத்தின் வேதனை மறந்துவிடுகிறது...

இதுவரை முரளிக்கு மட்டும் சொந்தமான அந்த அன்பில் பங்குகொள்ள இரண்டு ஜீவன்கள்.

டொக்....! டொக்....!

கதவு தட்டும் சத்தம்.

தாதி உள்ளே வர அனுமதி கொடுத்தாள்.

ஆ... முரளியேதான். அவன் கால்களில் ஒருவித அவதி. பிரசவத்தின்போது நிற்கவில்லையே என மனதில் ஒரு ஏக்கம்! அவன் கண்களில் நீர் பனிக்கிறது. "சுந்தரி சுகமா?" அன்பு தழுவிய குரல்.

அவள் அருகே இரண்டு குழந்தைகள். அவன் விழிகளில் இருந்து விழுந்த சில முத்துக்கள். உடம்பினுள் அளவிடமுடியாத மகிழ்வுணர்வின் ஓட்டம். சுந்தரியின் கரங்களை அவன் இறுகத் தழுவினான்.

"சுந்தரி, பிரசவத்தின்போது நான் உன்கூட நிற்கவில்லையே. அதற்கு நான்..."

அவன் வாய கைகளால் பொத்தினாள் சுந்தரி.

"முரளி....

இயக்கப் பிரதிநிதிகளுக்கும் குடும்பங்கள் உண்டு.

அவர்களுக்கும் ஆசாபாசங்கள் உண்டு. அதையும் கடந்துதான் அவர்கள் தாய்மண்ணுக்கெனவும் உழைக்க வேண்டுமென முன் வருகிறார்கள் என்பதை இந்த மக்கள் புரிந்தால் அதுவே எனக்குப் போதும்." ✱✱✱

# நானலா ?

குண்டுகள் மழையாய் கொட்டலாம்
வானைக் குடைந்தும் எதிரி குதிக்கலாம்
கடலும் பொங்கி எழலாம்
தென்றல்காற்றும் புயலாய் மாறலாம்

வெள்ளிகள் குண்டாய் மாறினும்
சிங்கக் கொடியது ஆளுமா
எங்கள் தங்கத் தமிழீழம் வீழுமோ
வங்கக் கடலே எழுந்தாலும்
சங்கத் தமிழே வாழுமடா
வேங்கைக் கொடியே அசையுமடா

- தாமரைக்கண்ணன் -

கிட்டு மாமா

கிட்டு மாமா தமிழீழத்தில் உள்ள
வல்வெட்டித்துறையில் பிறந்தார்.

இவர் தனது பதின் எட்டு வயதில்
ஈழப் போராட்டத்தில் சேர்ந்தார்.
இவர் சண்டைகளின் போது பல வெற்றிக-
ளை பெற்றுத்தந்தார். இவர் காட்டுக்குள்
இருந்து அக்கா, அண்ணா மார்களுக்கு ராணு-
வ பயிற்சி கொடுத்தார். கிட்டு மாமா
1985ம் ஆண்டு இலண்டனுக்கு வந்தார் அங்கு
நல்ல பாடங்களை படித்தார். அங்கு இருந்து
தமிழீழத்திற்கு போகும் போது இந்திய கட-
ற்படை கடலுக்குள் மறித்தனர். 16.01-93ல்
கிட்டு மாமா மற்றைய 9 அண்ணாமார் உடன்
கப்பலை வெடிக்க வைத்து தாமும் இறந்து
விட்டார். இவர் மிகவும் நல்ல மாமா. இவரை நாங்கள்
ஒரு நாளும் மறக்கமாட்டோம்

கோஷலி.

8 வயது நிரம்பிய சிறுமி கோஷலி ஜெயக்குமார் கிட்டண்ணாவைப்பற்றி எழுதியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மண்ணுக்குள் மரமங்கள்

உலகில் எல்லா இனங்களிலும் வீரமறவர்கள் தோன்றுகிறார்கள். வீரவாழ்க்கையில் தமிழினமும் குறைந்ததல்ல. அவர்தம் வாழ்வில் காதலும், வீரமும் இரு கண்களாய்ப் போற்றப்பட்டன. ஆம் அப்படித்தான் அகப், புறப் பாடல்கள் கூறுகின்றன. 1012க்கும் 1044க்கும் இடைப்பட்டது ராஜேந்திர சோழகாலம். அடுத்தடுத்து வீர உணர்வு கொண்ட மன்னர்கள் மாமன்னர்களாக பரிணாமம் கொண்ட காலம். கரிகால் பெருவளத்தான் காலம் தொட்டு, விஜாலயன் காலம் வரை நம் வீர இனம் உறங்கிக் கிடந்தது. விஜாலயன் காலத்தில் தமிழினம் மீண்டும் வீறு கொண்டெழுகிறது. தனது முத்திரையைப் பதிக்க விளைகிறது. அதன் பரிணாம வளர்ச்சியே இன்று தமிழகத்தில் மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் மணம் வீசுகின்ற நிலை. வெற்றி மேல் வெற்றிபெற்ற ராஜேந்திர சோழனுக்கு இந்திரனே இறங்கிவந்து முடிசூட்டுவதாக கல்லிலே கலை வண்ணம் வடித்தனர். கங்கை கொண்ட சோழபுரம், அது மிகப்பெரிய சோழ சாம்ராச்சியத்தின் தலைநகரம். இன்று அங்கு இருப்பதோ ஒரு கலை நயம் மிக்க கோயில் மட்டும்தான். வாள் கொண்டு விண்ணைக் கிழிக்க எத்தனித்த இராஜராஜ சோழன் இந்தக் கோபுரத்தைக் கட்டினானோ என்று எண்ணும் படி கம்பீரத் தோற்றத்துடன் அமைந்தது தஞ்சைப் பெரிய கோயில் என்றால், அவன் மகன் தன் வெற்றிகளையெல்லாம் விண்ணிலே எழுதுவதற்கு தூரிகை ஒன்று வேண்டும் என்று நினைத்து, நளினத்துடன் அமைத்த கோயில்தான் கங்கை கொண்ட சோழபுரம் கோயில். வீரத்திலும், விவேகத்திலும், கலையிலும் தன் தந்தையை மிஞ்சிய இராஜேந்திரனால் நிர்மாணிக்கப்பட்ட தலைநகரம்தான் கங்கை கொண்ட சோழபுரம். சோழர்களது தலைநகர் காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்பட்டது என்றாலும், இன்று அவற்றின் எச்சங்கள் கிடைப்பது சொற்பம் தான். சென்ற நூற்றாண்டில் மாளிகை மேடு என்ற இடத்தில் காணக் கூடியதாக இருந்த இராஜேந்திர சோழனின் சிதைந்த அரண்மனை, இன்று பூமிக்கடியில் அகழ்ந்து பார்க்க வேண்டிய நிலை. தென்னாசியப் பிராந்தியத்திலேயே மிக வலிமையான ஒரு அரசாக அன்றைய சோழ அரசு விளங்கியது. கடல் கடந்தும் தன் அதிகாரத்தைப் பெருக்கிய பெருமை சோழ மன்னர்களையே சாரும். அவ்வாறான மன்னர்கள் விட்டுச்சென்றது இந்தக் கோயில்களை மட்டும்தானா? இல்லை. இல்லவேயில்லை. வரலாறுகள் மறைக்கப்படுகின்றன, வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன, என்பதுதான் உண்மை. தஞ்சையிலும் கோயிலைத் தவிர இராஜராஜன் வாழ்ந்த அரண்மனைத் தடையங்கள் அங்கு இல்லை. அன்றைய மன்னர்கள் கோயிலைக் கட்டியது பக்தியின் பால் கொண்ட எழுச்சியால் மட்டுமல்ல. அவை வீரத்தின், வெற்றியின் சின்னங்கள். அவை கலை வெளிப்பாடுகள். கங்கை கொண்ட சோழபுரக் கோவிலின் விதானத்தில் அமையப்பெற்ற இரகசிய மந்திராலோசனை மண்டபமானது இராஜேந்திர சோழன் பக்திமான் மட்டுமல்ல, தலைசிறந்த அரசியல் சாதுர்யம் மிக்கவன் என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது. கங்கை வரை வெற்றிகொண்டு, எதிர்ப்பட்ட மன்னர்களின் தலைகளில் கங்கை நீரையே சுமக்கச் செய்து, தான் வெட்டிய "சோழகங்கம்" என்ற குளத்தை நிரப்பியவன். அதனாலேயே கங்கை கொண்டான் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றவன்.

வட இந்தியாவில் அரசாண்ட மன்னர்களது அரண்மனைகளும், கோட்டைகளும் இன்றும் காணக் கிடைக்கின்றன. ஆனால், தமிழகத்தில் மன்னர்கள் கட்டிய ஒரு சில கோயில்கள் தவிர எந்த தடயங்களும் இல்லை. கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் மட்டும் இல்லாது போயிருப்பின் வரலாறுகள் வேறு விதமாக திசை திருப்பப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. "கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் படிக்கப்படாமலும், வெளியிடப்படாமலும் உள்ளன" என்று கூறும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் சதாசிவ பண்டாரத்தாரின் கூற்றை கவனத்தில் கொள்ள வேண்டியது தமிழர்களின் தலையாய கடமையாகும். மன்னன் இராஜராஜனை விட கலை உணர்விலும் விஞ்சியவன் இராஜேந்திர சோழன் என்பதற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் அமைத்த கங்கை கொண்ட சோழபுரம் என்னும் தலைநகரம் மட்டுமல்ல, கோயிலின் அமைப்பும் இன்றும் கூறுகின்றது. தஞ்சையின் கம்பீரத் தோற்றம் கங்கை கொண்ட சோழபுரத்தில் நளினத்துடன் அமைந்துள்ளது. தான் நிர்மாணித்த நகருக்கு ஆறு இல்லை என்பதால் கொள்ளிடத்திலிருந்தும் வெள்ளாற்றிலிருந்தும் ஆறுகளை வெட்டினான். ஆற்றுநீரைக் கொண்டு குளத்தையும் நிரப்பினான். எக்காலத்திலும் தண்ணீர்ப்பிரச்சினை தோன்றா வண்ணம் தொலை நோக்குடன் செயல்பட்டமை இன்றும் காணக் கூடியதாக உள்ளது. கங்கை கொண்ட சோழபுரத்தை அண்மித்துள்ள கிராமங்களின் பெயர்களும் சரித்திர எச்சங்களாக உள்ளன. சோழபுரம், சுண்ணாம்புக்குளி, வானவன்மாதேவி, ஆயுதக்குளம், சோழன்மாதேவி, இராஜேந்திரப் பட்டினம், புத்தூர், சோழகங்கம், உட்கோட்டை, மாளிகைமேடு என்பனவையே அவைகள். நகரைச் சுற்றி 30 மைல் சுற்றளவிற்கு பெரிய கோட்டைச் சுவர் தென்படுவதாகவும், தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். தற்போது கோயில்களுக்கு வெளியே அமைந்துள்ள (எதிர்ப்புறத்தில்) குளமானது கோயிலின் பிரகாரத்திற்குள் அமைந்திருந்ததாகவும், வெளிப்பிரசாரத்தை தோண்டி எடுக்க வேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். தற்போது அமைந்துள்ள கிராம வீடுகள் அனைத்தும் கோயிலின் உள்ளேயே கட்டப்பட்டிருந்தன எனலாம். மூன்றாம் குலோத்துங்கசோழனை வென்ற மாறவர்ம சுந்தரபாண்டியன் சோழ நகர அழிப்புக்களைச் செய்தான் என்றாலும், கங்கை கொண்ட சோழபுரத்தை தரைமட்டமாக்கியது அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் மாலிகபூர். 1310ல் தமிழகத்தையே நடுநடுங்க வைத்த மாலிகபூர் தமிழர்கள்தம் சரித்திரச் சின்னங்கள் எதையும் விட்டு வைக்கவில்லை என்கிறது வரலாறு. அவன் விட்டுச் சென்ற எச்சங்களையும் 1365ல் விஜயநகர பேரரசன் தரைமட்டமாக்கினான். அதன் பின் 1756ல் பிரெஞ்சுப் படையும், 1765ல் பிரிட்டிஷ் படையும் தங்கள் பங்கிற்கு நாசப்படுத்தினார்கள். 1836ல் கோயிலின் முன்கோபுரமும் மதிற் சுவரும் இடிக்கப்பட்டு அணைக்கரை பாலத்தை பிரிட்டிஷ் அரசு கட்டியது. மீண்டும் இந்திய அரசும் அதே பணியைத் தொடர்ந்து கொண்டுள்ளதாக உள்ளது என்பதற்கு மிச்சம் இருந்த எச்சங்கள் கூட பாதுகாக்கப் படாமையே சான்று. தமிழீழமானாலும், தமிழ்நாடானாலும் தமிழர் தம் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்படவில்லை என்பதுடன் எதிரிகளால் திட்டமிட்டே தகர்க்கப்பட்டுள்ளது என்பதற்கு சாம்ராச்சிய எச்சங்களே சாட்சிகள். தமிழ் மண்ணுக்குள் உள்ள சான்றுகளைத் தோண்டி எடுக்க தமிழ் மண்ணை மீட்டெடுப்போம்.

**- வேலு -**



போராளிக் கலைஞன் தினேஷின் மிருதங்க அரங்கேற்றம், விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்றது. ஒரு போராளியாக, போர்க்கலை வல்லவனாக இருந்த தினேஷ், ஒரு மிருதங்கக் கலைஞனாகவும் தன்னை உருவாக்கிக் கொண்டான். இது குறித்து தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தியில்,

"போர்க்கலையில் மட்டுமின்றி போராளிகள் சகல கலை நுணுக்கங்களையும் கற்க வேண்டும்.

எமது போராளிகள் போர்க்கலையில் மட்டுமல்ல, சகல கலைகளிலும் நுணுக்கங்களையும் கற்று சகலகலாவல்லவர்களாக உருவாக வேண்டும் என்பதே எனது அவா. எனது ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில், நீ ஒரு இசைக்கலைஞனாக உன்னை உருவாக்கி, எம் போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்பதையும் நிரூபித்துக்காட்டியுள்ளாய். இசைத்துறையில் உன் முயற்சி வெற்றிபெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இன்று உனது மிருதங்க அரங்கேற்றம் நிகழ்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். மிகக் குறுகிய காலத்தில் இசைக் கலையைப் பயின்று, மேடையேறும் உனது முயற்சியைப் நான் பாராட்டுகிறேன்." என்று கூறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களும் போராளிகளாய் மாறியதால் வெற்றி......!

இன ஒடுக்கல் - உரிமை மறுப்பு - இழப்பை ஈடு செய்யப் புரட்சி - ஆயுதம் ஏந்தல் -மக்களின் அழிவு என்பன ஈழத்தில் வாழும் தமிழர்களாகிய எமக்கு மட்டும் நடைபெறும் இன்னல் அல்ல.

இன்று உலகில் பெரும்பான்மை நாடுகளில் இழந்த உரிமையை மீட்டெடுக்க யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அவ் யுத்தங்களில் போராளிகள் மட்டும் யுத்தம் செய்யவில்லை. மக்களும் சேர்ந்து போராடுகின்றார்கள். ஆயுதம் ஏந்தியும், போராளிகட்கு பலவாறான உதவிகளை அளித்தும் போராட்டத்தில் தம் பங்கை மக்கள் அளிக்கின்றனர். இத்தகைய உலக போராட்டங்களில் மக்களின் பங்களிப்பையே இங்கு தருகிறேன்.

## வியட்னாம் யுத்தம்

வியட்னாமில் பெரும் வல்லரசான அமெரிக்கா உள்ளூர் கிளர்ச்சியை தூண்டி விட்டு அதில் தன்னை ஈடுபடுத்தி பெரும் அழிவுகளை நிகழ்த்தியது. ஒரு பெரும் வல்லரசை அங்கு போராளிகள் சமாளித்தனர். எவ்வித உணர்வும் அற்று பொம்மர்களில் பாரிய சேதம் தரும் குண்டுகளை வீசியது. சிறுவரோ, பெரியவரோ யாரையும் நோக்காது நேபாம்களை வீசி நாட்டையே பற்றி எரிய வைத்தது. ஆனாலும் போராளிகள் சமாளித்தனர் மக்களின் பாரிய உதவியுடன்.

ஒரு இடத்தில் தாக்குதல் நடைபெற்றால் அவ்வேளை மக்கள் தம்மைக் காத்துக் கொள்ள பதுங்குகுழிகளில் பதுங்குவார்கள்

தாக்குதல் முடிந்ததும் மக்கள் நிற்கும் இடம் தாக்குதல் இடம் பெற்ற இடத்தில், வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல. அங்கு விழுந்த ஷெல்துண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் ஆகியவற்றைப் பொறுக்குவதற்காகவே. அவற்றை எடுத்துச் சேர்த்து போராளிகளிடம் அளிப்பார்கள். அவர்கள் அதனை உருக்கி மீள ஆயுதங்கள் செய்து தாக்குதலுக்குப் பயன்படுத்துவார்கள். இதனால் பொருளாதாரப் பிரச்சினை குறைகிறது. இந்த வேலையை போராளிகள் செய்யத் தொடங்கியிருப்பின் வியட்டனாம் என்றோ நிர்மூலமாகியிருக்கும். மக்கள் ஒத்துழைத்தமையாலேயே போராட்டம் வலுவாக இருந்தது. மேலும் அங்கு போராளிகள் வேலை போராடுவதே. போராளிகட்குத் தேவையான உணவுகளைத் தயாரித்தல், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல் போன்றவற்றைச் செய்தவர்கள் மக்களே. இதனால் போராளிகளின் வேலை போராடுவதாக இருந்தது.

இதனால் ஒரு பெரிய வல்லரசை மற்றைய நாடுகளின் துணையின்றி எதிர்க்கக்கூடியதாக இருந்தது. பெரும் விமானங்களை வீழ்த்தி வெற்றி கொள்ளக்கூடியதாக இருந்தது.

இங்கு மக்கள் தனித்து நிற்கவில்லை. போராளிகளோடு போராளிகளாகவே நின்றனர். எந்தநேரமும் தோளில் குடும்பத்திற்கொரு முதலுதவிப் பொருட்கள் இருக்கும். றொட்டி போன்ற உலர் உணவுப் பொருட்கள் இருக்கும்.

திடீர் என்று எவ்வித முன்னறிவிப்புமற்ற தாக்குதலை ஒவ்வொரு வினாடியும் எதிர்நோக்கியவாறு மக்கள் இருப்பார்கள்.

அத்தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவிகளை அளித்துக் காப்பார்கள். வீதிகள் எங்கும் சுத்தமாக பராமரிக்கப்பட்டிருக்கும். அவசர வேளைகளில் மக்கள் படுத்துத் தப்புவதற்காக, போராளிகள் வசதியாகத் தாக்குவதற்காக.

உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்காக உள்ளூர் உற்பத்தி வெகுவாகக் காக்கப்பட்டிருந்தது. எந்த உதவியையும் எதிர்பாராது தம்மைக் காத்துக்கொண்டார்கள் வியட்னாமிய மக்கள்.

வயல்களில் வேலை செய்வார்கள் பெண்கள். முதுகில் துப்பாக்கியோடு, இவர்கள் போராளிகள் அல்லர். மக்களே. தம்மைத் தாமே காத்துக் கொள்ள துப்பாக்கியை வைத்திருந்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திடீரென விமானம் வரும்.... தாக்கும். இங்கு அவர்களை விரட்ட போராளிகள் வரவில்லை. மக்களே, அதிலும் பெண்களே முதுகில் தொங்கும் துப்பாக்கியால் சுட்டு விரட்டினார்கள்.

கிராமம் கிராமமாக இளைஞர்கள் பயிற்சி பெற்றிருந்தார்கள். தங்கள் கிராமங்களை தாங்களே காத்து நின்றார்கள். அவர்களது விடுதலை இயக்கம் போராளிகளை இழந்து நிற்கும் வேளையில் அந்த இடத்தை அந்த பயிற்சி பெற்ற இளைஞர்கள் நிரப்பினார்கள். ஒருபெரும் வல்லரசை சமாளித்தார்கள். அதிலும் ஈவிரக்க மற்று படுகொலை புரியும் அணு குண்டையே வீசி அழிக்கத் தயங்காத பெரும் வல்லரசான அமெரிக்காவை சமாளித்தார்கள்.

போராளிகள் தனித்து நின்று இதனைச் சாதிக்கவில்லை. தனித்து நின்றிருந்தாலும் சாதிக்க முடியாதிருந்திருக்கும் மக்களும் போராளிகளாக மாறினர். இதனால்தான் அவர்களால் முடிந்தது.

அவர்களால் மட்டுமல்ல, மக்களின் ஒத்துழைப்பு கலந்த எந்த போராட்டமும் வெற்றியை ஈட்டும். மக்கள் மக்களாய் நில்லாமல் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும்.... வெற்றி நிச்சயம்.

நன்றி: ஈழநாதம்





குட்டிக்கதை

## கடமை

தற்பாதுகாப்பு பயிற்சி முடித்து கொண்டு மைதானத்தை விட்டு அவர்கள் வெளியே வந்துகொண்டிருந்தார்கள். பல்வேறு வயதினர் வேறுபட்ட தோற்றம் கொண்டவர்கள்.

தெருவில் நின்ற சில இளைஞர்கள் அவர்களை வேடிக்கை பார்த்தார்கள். கைகளில் அநியாய விலைக்கு வாங்கிய சிகரெட்டுக்கள் புகைந்துகொண்டிருந்தன. கண்களில் சிவப்பு.

"எட ஒரு 'நைன்டி'யும் ரெயினிங் எடுக்குது மச்சான்" என்றான் அவர்களில் ஒருவன்.

அவனால் நைன்டி என்று சுட்டிக்காட்டப்பட்டவருக்கு அந்த வார்த்தைகள் காதில் விழுந்திருக்க வேண்டும். அவர் அந்த இளைஞர்களை நோக்கி நடந்துவந்தார். நரைத்த தலையுடன் முதுமை களை கட்டியிருந்தது.

"தம்பியவை எனக்கு இன்னும் தொண்ணூறு ஆகேல்லை. இப்பத்தான் அறுபது வயது எனக்கு உங்களைப் போல ஒரு பெடியன் இருக்கிறான். அவனும் உங்களைப் போலதான் றோட்டு அளக்கிறான். என்ன செய்ய குடும்பத்தில் கடைசி ஒருத்தராவது போராட்டத்தில் சேரவேண்டும் எண்டதுக்காக வெளிக்கிட்டு இருக்கிறன். கடைசி, என்னைப் பார்த்திட்டாவது அவன் திருந்தட்டும் என்றார். உங்களைப் போல ஆக்களுக்கு இதுகள் பகிடியாகத்தான் இருக்கும்.

அயக்கிரீவன்

www.tamilarangam.net

# குழப்பநிலையில் ஸ்ரீலங்கா

-ஜெய்-

**மண்கிண்டிமலை (ஜனகபுர்) இராணுவ முகாம் தகர்ப்பு: அங்கு ஏழுகோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான நவீன ஆயுதங்கள் இழப்பு. கிளாலிக் கடற்பரப்பில் மூன்று 'வோட்டர் ஜெட்' படகுகள் ஒரே நாளில் இழப்பு. நான்கு நாள் இடைவெளியில் பருத்தித் துறைக் கடற்பரப்பில் முப்பத்தியிரண்டு கோடி ரூபா பெறுமதியான இஸ்ரேல் தயாரிப்பான அதிவேக தாக்குதல் படகு 'சுப்பர் டோரா' நிர்மூலம்.**

கடந்த மூன்று மாதங்களுக்குள் சிறிலங்கா அரச படைகள் சந்தித்த பாரிய இழப்புக்கள் இவை.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு, சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரத்தில் அச்சத்தையும் கூடவே உள்மோதல்கள், முரண்பாடுகளைத் தோற்றுவித்திருந்த நிலையில், வடபகுதிக் கடற்பரப்பில் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரத்தையும், சிறிலங்கா அரசையும் கலக்கத்திற்கும், குழப்பத்திற்கும் உள்ளாக்கியுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் படைத் தலைமைக்கும், செயற்படுத்தும் களத் தளபதிகளுக்குமிடையில் அதிகாரச் சிக்கல்களாலும், பதவிப் போட்டிகளாலும் தோன்றியிருந்த முறுகல் நிலை, விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்களால் மேலும் இறுக்கம் அடைந்தது.

விடுதலைப் புலிகளிடம் சந்திக்கும் பாரிய தோல்விகளுக்கான காரணத்தை யார் தலையில் சுமத்திவிடுவது என்பதே அவர்களுக்கிடையில் நிலவும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அரசியல்வாதிகளும், கட்டளை பிறப்பிக்கும் தலைமைத் தளபதிகளும் களத்தில் நிற்கும் இராணுவத்தினர் மீதும், களத்தளபதிகள் மீதும் குற்றம் சுமத்த, களத்தில் நிற்பவர்களோ அரசியல்வாதிகள் மீதும், யுத்தத்தை நெறிப்படுத்தும் தலைமைத் தளபதிகள் மீதும் குற்றஞ் சாட்டிவருகின்றனர்.


மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பால் மிக அதிருப்தியுற்றிருந்த சிறிலங்கா ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா, களத்தளபதிகளையும், இராணுவத்தினரையும் மிகக் கடுமையாகக் கண்டித்ததுடன், இராணுவத்தினர் இனி பகலில் நித்திரை செய்து இரவில் விழித்திருக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், கடற்படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திப் பார்க்கவேண்டும் என சிறில்ங்கா அரசைத் தூண்டியிருக்கக்கூடும். வடக்கு கிழக்கு யுத்தத்திற்கென இஸ்ரேலிய அறிவுரையின் பேரில் உருவாக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமையகம் இரவோடு இரவாகக் கலைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்வோல்டர் பெர்னாண்டோ தனது பதவியை அன்றே இராஜினாமாச் செய்தார். கூட்டுப்படைத் தளபதியாகவிருந்த கமில்ரன் வனசிங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக்கப் பட்டார். இராணுவ நடவடிக்கையைத் திட்டமிட்டு நடத்தும் பொறுப்பு முப்படைத் தளபதிகளிடமே விடப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்கவும் ஆலோசனை வழங்கவும் உயர்மட்ட உதவிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாக அனைத்தையும் கண்காணிக்கும் பொறுப்பு ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடமே தொடர்ந்து இருந்து வருகிறது.

தொடர்ந்து மேடைகளிலெல்லாம், நாட்டில் இனப் பிரச்சினை இல்லை எனவும் பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு எனவும் தற்போது டி.பி. விஜயதுங்கா கூறிவருகின்றார். சிங்கள இனவாதிகளினாலேயே உருவாக்கப்பட்டு, உரமிட்டு வளர்க்கப்பட்ட இனப்பிரச்சினையைத் தீர்க்க முனையாமல், மறுக்க முனைவது டி.பி. விஜயதுங்காவின் இயலாமையையும், தேவையையும் வெளிப்படுத்துகின்றது. தேர்தல் காலங்கள் நெருங்கும்போது, தென்பகுதி மக்களின் வாக்கைக் கவரும் நோக்குடன் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆட்சிக்கு வரும் சிங்களக் கட்சிகளின் தேவையாகவே இருந்துவருகின்றது. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத்தேர்தலையும் சந்திக்கவுள்ள சிறிலங்காவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராளிக் கலைஞனாக விளங்கும் சு. செம்மலையான் தன்னோடு போர்க்களத்தில் போராடி தாய்மண்ணுக்காக மரணித்த மாவீரன் ஜோர்ஜ் நினைவாக வரைந்த ஓவியம்

இனவாத வெறிப்பேச்சுக்களும், தமிழருக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்களும் தவிர்க்க முடியாத தேர்தல்கால பணியா கவே வளர்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பலவீனமாக இருக்கும் டி.பி. விஜயதுங்கா போலியாகத் தானும் விடுதலைப் புலிகளுக்கு சமாதானக் கரம் நீட்டுவார் என எதிர்பார்க்க முடியாது. எனவேதான் தீவில் இனவாதப் பிரச்சினை இல்லை என்ற சிங்களத் தீவிர இன வாதிகளின் கருத்தை சிறிலங்கா ஜனாதிபதியும் உரத்துக் கூறிவ ருகிறார்.

பிரேமதாசாவோ, இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகக் கூறி பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்தார். இனப்பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதே தனது வழியென அடிக்கடி அறிவித்தார். அதே வேளை, தமிழ் மக்கள் மீது தனது இராணுவப் பயங்கரவாத வெறி யாட்டத்தை மேற்கொண்டார். பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு சமாதான முன்னெடுப்பொன்றை மேற்கொள்வதாக புத்திசாலித் தனமாகக் காட்டிக்கொண்டு, இராணுவத் தீர்வில் நாட்டம் கொண்டார். அதேபோன்றே தற்போதைய ஜனாதிபதியும் இராணுவத் தீர்விலேயே அதீத நாட்டம் கொண்டுள்ளார். சமாதானத்தின்மீதும், அமைதி வழித் தீர்வின் மீதும் நாட்டம் கொண்டவராக இவர் தன்னையும் ஆரம்பத்தில் காட்டிக்கொள்ள முனைந்தாலும், அரசியலில் உள்ள அவரது பலவீனமான நிலையால் இருவேடங்கள் அவருக்கு ஒத்து வரவில்லை. பதவியேற்றபோது, “தலைவர்கள், தலைவர்களுடன் தான் பேசவண்டும்” எனவும், தான் பிரபாகரனுடன் பேச விரும்புவதாகவும் அறிவித்த டி.பி. விஜயதுங்கா இன்று, “தமிழர் பிரச்சினை என்ற ஒன்று நாட்டில் இல்லவே இல்லை” என்று அடித்துக் கூறுகின்றார். அப்படி யானால், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளும், மாநாடுகளும், ஒப்பந்தங்களும், இந்நாளில் சிறிலங்கா அரசால் உருவாக்கப் பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் ஏன் என்று எழும் கேள்வி ஒருபுறம், இன் னொருபுறம் தமிழர் பிரச்சினை இன்று சர்வதேசமயப்பட்ட ஒரு பிரச்சினையாக கருதப்படுவதுடன், இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, தமிழர்கள் தமது நாட்டிற்கு திரும்பிச் சென்று பாதுகாப் புடனும் உரிமையுடனும் வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற அவா சர்வதேச நாடுகளிடையே தோன்றி வளர்ந்தும் வருன்றது. தமிழர் தாயகத்தின் மீதான இனப்பிரச் சினையைப் பேசித் தீர்க்க சர்வதேச அழுத்தம் சிறிலங்கா மீது பிரயோகிக்கப்பட்டு வருகின் றது. பேச்சுவார்த்தைகளை இரு தரப்பும் மேற்கொள்ள சர்வதேச மட்டத்தில் முயற்சிகள் நடைபெறு கின்றன. இனப்பிரச்சினை முனைப்புப்பெற்றுள்ள இன்றைய நிலையிலும் டி.பி. விஜயதுங் காவின் இத்தகைய அறிவிப்பு, சிங்கள தேசத்தின் தேர்தல்கால பிரச்சாரத்தின் ஆரம்பமாகவும், தமிழர் தாயகத்தின் மீதான இராணுவ வெறியாட்ட ஆயத்தங்களின் சமிக்ஞையாகவும், இன்னொரு இராணுவத் தீர்வு முயற்சியாகவும் அமைகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலஸ்தீன சமாதானத் திட்டம் நிலைக்குமா?


வளவன்

இடைக்காலத் தீர்வுகள் நீதியான நிரந்தரத் தீர்வுக்கு இட்டுச் செல்வது உண்டு. அதற்கு மாறாக, முன்னிருந்ததிலும் மிக மோசமான அடக்குமுறைக்குப் பின்நோக்கி நகர்த்துவதும் உண்டு. சோவியத் யூனியனை எடுத்துக் கொண்டால், பல்வேறு தேசிய இனங்களை, சமஷ்டிக் குடியரசுகளாக அமைத்திருந்த முறையானது, சுதந்திரக் குடியரசுகளை அமைக்க உதவியதைக் காணலாம். அதேவேளை, எரித்திரியாவை எடுத்துக் கொண்டால், ஐ. நா. சபையின் ஊடாக அமைக்கப்பட்ட சமஷ்டி முறையிலான இடைக்காலத் தீர்வானது, அச்சமஷ்டி அமைப்பு முறை அகற்றப்பட்டு, எத்தியோப்பியாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எரித்திரியா ஆட்பட்ட பின்னர் பல்லாண்டு காலமாக எரித்திரிய மக்கள் போராடி தங்கள் விடுதலையை சாதிக்க வேண்டி இருந்தமையையும் அவதானிக்கலாம்.

இந்த அடிப்படையில்தான் இஸ்ரேல் நாட்டிற்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையில் நடந்த ஒப்பந்தத்தை நோக்கலாம். இந்த ஒப்பந்தம், பலஸ்தீனர்களுக்கான ஒரு சுதந்திர நாடு என்ற இலக்கை நோக்கி நகர்த்துமா அல்லது இஸ்லாமிய ஆக்கிரமிப்புள் பலஸ்தீன மக்களை நிரந்தரமாக ஆக்குமா என்பதை அறிய நீண்ட காலம் பொறுத்திருக்க வேண்டியதில்லை. யூத, பலஸ்தீனப் பிரச்சினையை தமிழ் சிங்கள பிரச்சினையைப் பார்ப்பது போல், பல்லாயிரம் ஆண்டுகாலக் கணக்கிலும் பார்க்கலாம். 1948 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட வரலாற்றுத் தளத்திலும் நோக்கலாம்.

வேதாகம காலத்தில் யூதர்களுக்கும், பலஸ்தீனியர்கள் உட்பட்ட ஏனைய இனங்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குகள், போர்கள் என்பனவும், பின்னர், மத்தியதரைக் கடலை அண்டிய அப்பகுதி, ரோம சாம்ராட்சியத்தின் ஏகாதிபத்திய ஆளுகைக்கு உட்பட்டதும், யூதர்கள் கலைக்கப் பட்டு, உலகம் பூராவும் பரவியமையும் பண்டைய வரலாறாக உள்ளது. பின்னர், 1880ம் ஆண்டுக்குப் பின்னர், தியடோர் கெசல் என்பவரின் தலைமையில் சியோனிச இயக்கம் உருவாக்கப் பட்டு, ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பப்பட்டு, பிரிட்டிஷ் கண்காணிப்பின் கீழ் விடப்பட்டிருந்த பலஸ்தீனத்தில் இருந்த யூதர்களின் எண்ணிக்கையைப் பெருக்கியமையும் யூதர்களின் வரலாறாகவும், பலஸ்தீன வரலாறாகவும் அமைகிறது. பின்னர் 1948ல் பிரிட்டிஷ் கண்காணிப்பு பலஸ்தீனத்திலிருந்து விலக, ஐ.நா. சபை யூதப்






ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் யாசிர் அரபாத்தும் ரபின் அவர்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளையும், ஏனைய பலஸ்தீனப் பகுதிகளையும், பிரிவினை செய்து இஸ்ரேல் என்ற சுதந்திர நாட்டுக்கு வழி அமைத்துக் கொடுத்தது. இஸ்ரேலிய சுதந்திர நாட்டுப் பிரகடனத்தையும், ஐ.நா. சபையின் அங்கீகாரத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்த, பலஸ்தீனியர்கள் (பலஸ்தீனத்தில் வாழ்ந்த அரபு முஸ்லீம்களும், சிறு எண்ணிக்கையான கிறிஸ்தவர்களும்) அண்டைய அரபு நாடுகளுடன் இணைந்து புதிய யூத நாட்டுக்கெதிராகப் போர் தொடுத்தனர். இப் போரில், புதிய இஸ்ரேல் நாடானது பெரும் படைப் பலம் நிறைந்த பல் நாட்டு அரபுச் சேனைகளைத் தோற்கடித்து, தனது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டது. ஐ.நா. சபையால் பிரிக்கப்பட்ட அரபுப் பகுதிகளை 1967ம் ஆண்டுப் போரின் போது இஸ்ரேல் கைப்பற்றி இணைத்துக் கொண்டது. ஜோர்தான் ஆற்றின் மேற்குக்கரை, காஸா, கிழக்கு ஜெருசலாம் ஆகியவை மட்டுமல்ல, ஜோர்தான் நாட்டின் சில பகுதிகளும், சிரிய நாட்டின் கோலன் மலைப் பகுதிகளும், எகிப்தின் சினாய் பாலைவனப் பகுதிகளும் இவ்வாக் கிரமிப்புக்கு உட்பட்டன. இப் போர் வெற்றிக்குக் காரணமாக




இருந்த படைத்தளபதி ராபின் தான் இன்றைய இஸ்ரேலிய பிரதமர். இவ்யுத்தங்களின் போது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அகதிகளாக்கப்பட்டோரினதும்,

வெளிநாடுகளுக்கு அகதிகளாக வெளியேற்றப்பட்டோரினதும் வரலாறே பலஸ்தீன விடுதலைப் போராட்ட வரலாறாகும். 1948ம் ஆண்டின் பின், பலஸ்தீன விடுதலை தொடர்பாக இஸ்ரேல் நாட்டுக்கும், ஏனைய அரபு நாடுகளுக்கும் இடையே, 1967, 1973, 1982 ஆண்டுகளில் போர்கள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு விடுதலை இயக்கங்கள், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக போராடி வந்தன. இவை அனைத்தும் இணைந்து பலஸ்தீன விடுதலை இயக்கத்துள் வந்தன. பலஸ்தீன தேசியக் கவுன்சில் என்ற அமைப்பு பலஸ்தீன பாராளுமன்றமாகச் செயற்பட்டு வருகின்றது. பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டு, பல்வேறு நாடுகளில் அதன் தூதுவராலயங்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. பலஸ்தீன தேசியக் கவுன்சிலால் பிரகடனப்படுத்தப் பட்ட பலஸ்தீனப் பட்டயமானது இஸ்ரேலிய நாட்டை அழிப்பதையும் பலஸ்தீன முழுமையிலும் பலஸ்தீன நாட்டை அமைப்பதையும் வலியுறுத்துகிறது. 1988ம் ஆண்டில் பலஸ்தீன தேசியக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இஸ்ரேலிய நாடு இருக்கும் உரிமையை (Right to exist) அங்கீகரித்தது. அதே ஆண்டு, ஜெனிவாவில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத், இஸ்ரேலிய நாடு இருக்கும் உரிமையை மீண்டும் வலியுறுத்தியதோடு, தங்கள் அமைப்பு பயங்கரவாத நடவடிக் கைகளில் ஈடுபடாது எனக்



இஸ்ரேலிய ஆயுதத்துக்கு எதிராக கற்களுடன் பலஸ்தீன சிறுவர்கள்

கூறியதோடு, அரச பயங்கரவாதத்தையும் கண்டித்தார். ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், 242ம், 338ம்

இஸ்ரேல் நாட்டின் இருப்புரிமையை வலியுறுத்திய அதே வேளை, இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் எனவும், வெளிநாடுகளில் உள்ள பலஸ்தீன அகதிகள் தமது தாயகத்துக்கு திரும்புவதையும் வலியுறுத்தியது.

இஸ்ரேலுக்கும், அண்டை அரபு நாடுகளுக்கும், பலஸ்தீனப் பிரதிநிதிகளுக்கும் இடையில், அமெரிக்க புஷ் நிர்வாகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு புறம்பாக, நோர்வே நாட்டு ஒஸ்லோவில், இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கும், நோர்வே நாட்டு அரசாங்க மேற்பார்வையில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தையின் விளைவாக இணக்கம் ஒன்று ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் ரபினுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கும் இடையில் கைச்சாத்தான சமாதான ஒப்பந்தத்தைப் பார்ப்போம்.

அடிப்படை கொள்கைகள் மீதான ஒப்பந்தமாக இது அமைகிறது. அமெரிக்காவில், வோஷிங்ரனில், அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் தலைமையில் ரபினாலும் அரபாத்தாலும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தவிர கடிதங்களும் கைமாறப் பட்டுள்ளன. இவ் ஒப்பந்தப் பிரகாரம் பலஸ்தீன விடுதலை இயக்கமானது இஸ்ரேலிய நாடு அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் உரிமையை அங்கீகரிக்கிறது. இஸ்ரேலின் இருப்புரிமையை மறுக்கும் பலஸ்தீன பட்டயச் சரத்துக்களை மறுதலிக்கின்றது. பயங்கரவாத, ஏனைய வன்செயல் முறைகளைக் கண்டிப்பதோடு, ஜோர்தானின் மேற்குக் கரை, காஸா ஆகிய பகுதிகளில், வன்செயல்கள் இல்லாதொழிந்த சகஜ வாழ்க்கையை வலியுறுத்துகின்றது. இதற்குப் பதிலாக, இஸ்ரேலிய அரசாங்கம், பலஸ்தீன மக்களின் ஏக பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்கின்றது. காஸா மற்றும் மேற்குக் கரையிலுள்ள ஜெரிக்கோ நகரம் ஆகிய இடங்களில் பலஸ்தீனியர்களின் மட்டுப்பட்ட சுய ஆட்சியை அங்கீகரிக்கின்றது. இஸ்ரேலிய இராணுவம் இவ்விடங்களில் உள்ள நகர்ப்புற மக்கள், குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேறி, கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் எனவும், சுயஆட்சியானது, மேற்குக் கரையின் ஏனைய பகுதிகளுக்கும் சில

www.tamilarangam.net



**'பயப்படாதையடா எங்கட கடல்,**
**எங்கட கடற்கரை**
**நான் இருக்கிறன்'**

**உங்களோடு இந்தப் புகைப்படம் பேசுகிறதா? அப்படியாயின் கவிதையாகவோ, உரைவீச்சாகவோ, குட்டிக்கதையாகவோ இருபக்கத்திற்கு மேற்படாமல் எழுதியனுப்புங்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வருடங்களின் பின்னர் நிலைமையின் போக்கிற்கேற்ப விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கின்றது.

இவ் ஒப்பந்தப் பிரகாரம் சுயாட்சியின் முடிவில், பாலஸ்தீன நாடு அமையும் என்று எதுவும் கூறப்படவில்லை. சுயாட்சியும் முதலில், காஸா, ஜெரிக்கோ ஆகியவற்றிற்கு மட்டுமே என்ற அளவில் உள்ளது. சுயாட்சி, சுகாதாரம், கல்வி, சமூக நலன் என்ற துறைகளில் மட்டுமே உள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட யூதக் குடியேற்றங்களை அகற்றுவது குறித்து எதுவும் இல்லை. இஸ்ரேலிய இராணுவமும் கிராமங்களுக்குச் செல்கின்றதே ஒழிய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறவில்லை. இப்பகுதிகளின் சகஜ நிலைக்கும், வன்செயல் தலைதூக்காமைக்கும் ஒப்பந்தம் மூலம் பலஸ்தீன இயக்கம் கொடுத்துள்ள உத்தரவாதமானது அங்கு தற்போது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் போராட்டத்துக்கு (INTIFADA) ஆப்பு வைத்துவிடும் என்று நம்பப்படுகின்றது. காஸா, ஜெரிக்கோ ஆகிய இடங்களில் நடைபெற உள்ள தேர்தல்களில் பங்குபற்றி, அங்கு மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சியை பலஸ்தீன மக்கள் நிர்வகிக்கலாம் என்பதே இறுதியில் பெறப்படுகின்றது. பலஸ்தீனப் பொலிஸ்படை, பலஸ்தீனப் போராளிகளைக் கொண்டு உருவாகுமா? அவ்வாறு உருவாகுமானால் அப்படை பலஸ்தீனப் புரட்சியை முன்னெடுக்குமா? அல்லது பலஸ்தீனப் போராட்டக்காரர்களுக்கு (INTIFADA) எதிராக நடவடிக்கை எடுக்குமா? பலஸ்தீன மத அடிப்படைவாதிகளுக்கும், ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்கும் எதிராக பொலிஸ்படையும், பலஸ்தீனிய உள்ளூர் நிர்வாகமும் நடவடிக்கை எடுத்தால், அது பலஸ்தீனியர்களுக்கிடையிலான போராக வெடிக்குமா? இவை போன்றவை ஆழமான கேள்விகளாக உள்ளன.

www.tamilarangam.net

காணப்படும் அமைதி நீதியானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்க வேண்டும். இடைக்காலத் தீர்வெனில், அது நிரந்தரத் தீர்வுக்கும், விடுதலைக்கும் இட்டுச் செல்ல வேண்டும். யாசிர் அரபாத் பலஸ்தீனப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக எதிர்த் தரப்பினர் கூறுவதை, அது அவ்வாறு இல்லை என அவரே நிரூபிக்க வேண்டும். சிரியாவும், அங்கு செயற்படும் பலஸ்தீன மக்கள் விடுதலை இயக்கம் போன்ற அமைப்புகளும் இவ்வொப்பந்தத்தை வரவேற்கவில்லை; கண்டித்துள்ளன. ஹாமாஸ் போன்ற இயக்கங்கள் அரபாத்துக்கு மரணதண்டனையே விதித்துள்ளன. பலஸ்தீன விடுதலை இயக்கம், வளைகுடாப் போரின் பின்னர், மிகுந்த பண, உள்மோதல் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றதென்றும், யாசிர் அரபாத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இவ்வொப்பந்தத்தைச் செய்துள்ளதாகவும் அவை குற்றம் சாட்டியுள்ளன. பலஸ்தீன விடுதலை இயக்கத்தினுள்ளும், யாசிர் அரபாத்தின் அல்பதா இயக்கத்தினுள்ளும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இவ்வொப்பந்தத்தில், பலஸ்தீன சுதந்திர நாடு பற்றி எதுவும் குறிப்பிடப்படாமையிலிருந்து ஒன்று தெரிகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளையும் உள்ளடக்கிய இஸ்ரேல் நாட்டில் அமைக்கப்படும் பலஸ்தீன சுயாட்சிப் பகுதிகளே பலஸ்தீனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு என்பது புலப்படும். இச் சுயஆட்சி, இஸ்ரேலின் தலைநகராக்கப்பட்ட ஜெருசலேமின் பலஸ்தீனப் பகுதியாகிய கிழக்கு ஜெருசலேமில் அமையுமா என்ற கேள்வி மிக முக்கியமான தொன்றாகும். சிரியாவிடமிருந்து கைப்பற்றப்பட்ட கோலன் மலைப்பகுதியும் இவ்வகண்ட இஸ்ரேலுள் அடங்கும். எனவே, நிலம் கொடுத்து சமாதானம் (Land for Peace) என்பதன் அர்த்தம், பலஸ்தீனப் பகுதிகளில் நடைபெறவிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சியையே குறிப்பதாக இருக்கும். 1967ம் ஆண்டு அகண்ட, வேதாகம இஸ்ரேலை உருவாக்கும் பொருட்டு, திட்டமிட்ட ரீதியில் கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளை, அரபுப் பகுதிகளை, அவற்றைக் கைப்பற்றுவதற்கு முக்கிய காரணமாய் இருந்த இன்றைய இஸ்ரேலியப் பிரதமரே கைவிட்டுவிட அடியெடுத்துக் கொடுப்பார் என்பது நினைத்துப் பார்க்க முடியாது. பிரிட்டிஷ் சாம்ராட்சியத்தின் கண்காணிப்பின் கீழிருந்த பலஸ்தீனம் முழுமைக்கும் இருபகுதியினரும் உரிமை கோருவதால், அகண்ட இஸ்ரேலின் கீழ், பலஸ்தீனியர்களுக்கு மட்டுப்பட்ட சுயாட்சியை வழங்கலே நடைமுறைச் சாத்தியமென சர்வதேச சமூகம் அங்கீகரிக்குமாறு வலியுறுத்தப்படுவதாகவே படுகின்றது.

பலஸ்தீனப் போராட்டம், பலஸ்தீன விடுதலை இயக்கத்தை விட்டு, வேறு தலைமையிடம் சென்று கொண்டிருக்கும் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்காக, பலஸ்தீன விடுதலை இயக்கத்தை தூக்கிப் பிடிக்கும் இஸ்ரேலின் இராஜதந்திரச் செயல் இதுவென ஒப்பந்தத்தை எதிர்ப்போர் கூறுவர். ஆயினும் நிரந்தர சமாதானமும், வாழ்வும் பலஸ்தீன மக்களுக்கு ஏற்படுவது அவசியமானது. அதனைத், தொடரப் போகும் பலஸ்தீன மக்கள் போராட்டமும் (INTIFADA) தீவிர மத அடிப்படைவாதமும் சாதிக்குமா அல்லது நீண்டு கொண்டு போகும் ஏனைய சில போராட்டங்களைப்போல் தொடருமா என்பதும் மனதை நெருடும் சந்தேகங்களே. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பலஸ்தீன தனிநாடு உருவாகாத பட்சத்தில், போராட்டம் தொடருமானால், சமாதான ஒப்பந்தத்தின் கதி என்ன? அதனை கைசாத்திட்ட யாசிர் அரபாத்தின் கதி என்ன?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**பேரன்புடையீர்,**

ஆவணி இதழின் தலையங்கத்தில் *'83-93'*க்கும் இடைப்பட்ட இந்தப் பத்தாண்டு கால தமிழீழ விடுதலைப் போர், தனிநாட்டுக்கான எல்லா அம்சங்களோடும் வளர்வதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். இலங்கை அரசின் போர்க்கைதி விடுப்புத் தொடர்பான செய்தியில் விடுதலைப் புலிகளின் அமைப்புக்கான அங்கீகாரமும், தமிழீழ விடுதலையின் பிறப்பும் நெருங்கி விட்டதாகக் குறிப்பிடப்பட்டதைப் படித்து தமிழீழ விடுதலை ஆதரவாளர்களிடம் செய்தியளித்து மனம் மகிழ்ந்தேன். தமிழீழ விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்திய அரசு எடுத்ததற்குப் பின்னர் விடுதலைச் செய்திகளை பி.பி.சி. தமிழோசை மூலமே அறிந்து கொண்டிருந்த எங்களுக்கு அச்சு வடிவில் ஆவணமாய் "எரிமலை"யின் வருகை என்றும் வரவேற்புக்குரியது. தொடர்ந்து எரிமலை வெற்றிநடையிட எம் கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

**தமிழன்புடன்**
**தி. நெடுஞ்செழியன்**

www.tamilarangam.net



# அக்கறைப்பூக்கள்

**பாசமிகு எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

வணக்கம். தமிழர்களின் போர் குரல் 'எரிமலை' பத்திரிகையைப் படித்தேன். தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு கால்வயிற்றுக் கஞ்சி கிடைக்கிறது. சினிமா பார்க்க 10 ரூபாய் கிடைக்கிறது. இங்குள்ள அரசியல்வாதிகள் தமிழ் இளைஞர்களை சிந்திக்க விட்டால், தங்கள் அரசியல் நடத்த முடியாது என்று ஆபாச சினிமா, லாட்டரி சீட்டு, கள்ளச் சாராயம், பல போதைப் பொருட்கள், மற்றும் இளைஞர்களை சீரழிக்கக் கூடிய வேலைகளை எண்ணை ஊற்றி எரிய விடுகிறார்கள். தமிழினத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா அரசியல் தலைவர்களினதும், மத்தியில் பல சித்திரவதைக் கூடங்களைத் தாண்டி பலமான அமைப்பைக் கட்டமைத்து கொண்டிருக்கிறோம். நமது எரிமலை எங்களுக்கு ஒரு உறுதுணையாக இருக்கிறது. எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**தமிழ்நாடு**
**வெங்கிடு**

**அன்பின் எரிமலை ஆசிரியர்க்கு,**

போரில் தாய் தந்தையரை இழந்த செஞ்சோலைச் சிறுவர்களுடன் தலைவர் பிரபாகரன் அவர்கள் பேசி மகிழும் காட்சி மனதிற்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

**சுதா**
**பாரீஸ்**

**எரிமலை குழுவினருக்கு,**

எரிமலையின் வடிவமைப்பு நன்றாக இருக்கிறது. ஓவியங்களை தமிழ் மக்கள் மத்தியில் கவனிப்புக்குரியதாகவும், பழக்கத்திற்குக் கொண்டுவரவும், நீங்கள் எடுக்கும் அக்கறையை நான் பாராட்டுகின்றேன்.

**கண்ணா**
**ஜெர்மனி**

**அன்பின் எரிமலை ஆசிரியருக்கு எனது அன்பு வணக்கங்கள்,**

சென்ற மாத இதழில் ஓவியர் மகாவினது பலூன் சிறுகதைக்கான ஓவியம் நன்றாக இருந்தது. போட்டி நடத்துபவர்களையும், அந்தச் சிறுவர்களையும் அவர்களின் உணர்வுகளையும் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியது.

**மாதவன்**
**சுவிஸ்**

**அன்பின் எரிமலை ஆசிரியரின் கவனத்திற்கு,**

தங்களால் வெளியிடப்படும் எரிமலையைத் தவறாது வாசிப்பவர்களில் நானும் ஒருவன். தங்களின் எரிமலை இதழைப் போலவே 'களத்தில்' பத்திரிகையையும் தவறாது வாசிப்பேன். தயவு செய்து இரு பத்திரிகைகளிலும் ஒரே விடயத்தை வெவ்வேறு வார்த்தைகளில் பிரசுரிப்பதை தவிர்த்து, இன்னும் புதுப் புது விடயங்களை எங்களுக்குப் படைக்க வேண்டும் என்று ஆவலுடன் வேண்டுகின்றேன்.

**த. ரவி**
**பரிஸ்**

**அன்புடையீர் வணக்கம்!**

எரிமலை ஆவணியிதழில் "இவள் மீண்டும் வரமாட்டாளா?" என்ற தலைப்பில் வந்த ஒருபக்கச் செய்தியை ஒரு ஆசிரியப் பாவாக வடித்துள்ளேன்.

## மகளாய் வரவேண்டும்

**வீங்குநீர்வேலி வியன்பெருங் குன்றம்**
**ஓங்குபுகழ் மீண்டும் ஒருதனி யீழத்துப்**
**பழுதுறு பண்ணை திருத்தும் பணிச்சி**
**அழுத பிள்ளைக் கன்னை போல்வாள்**
**சிறுமதிக் காடையற்கோ சீயமன்னாள்**
**செருக்களத்துச் சினப்புலி அவள்தான்**
**குவேனி**
**வியர்வை சிந்தி விளைந்த உழைப்பின்**
**உயர்வில் வந்த பயனை நாளும்**
**குடியில் தொலைத்துக் குடும்பம்**
**கெடுத்து**
**முடிவை யுணராமுடன் என்னை**
**ஏசித் திருத்தி என்றன் நலத்தை**
**நேசித் திருந்தாள். ஒருநாள் காடையர்**
**படைமுகாம் தாக்கித் தகர்க்கும் திட்டத்**
**திடையில் களத்தில் மடிந்தனள்.**
**அவள்தான்**
**மீண்டும் பிறந்தென் மகளாதல்**
**வேண்டும் ஈழவிடுதலை பெறவே.**

**காவிரிநாடன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருகிய மலரொன்று



"நாட்டினைப் பிரிந்த
நலிவினால் சாதலும்
இதெல்லாம் கேட்டு
எனதுளம் அழிந்திலேன்"
-பாரதி-

தமிழ் சாதி படுதுயர் கண்டு கலங்கியழுது பாரதி அன்றெழுதிய கவிதை வரி போல் இன்றுள்ள எமது நிலையை இப்படித்தான் நாமும் சொல்லிக்கொள்கின்ற காலம். பனி விழும் மலர் வனங்களில் அழுத கண்களோடும், துயரங்களோடும், அடிபட்டும், உதைபட்டும் நகருகின்ற இயந்திர வாழ்வியக்கம். மனிதர்கள் என்பதை மறந்து வாழ விளைகிற ஒரு உயிரினமாய்ப் பலர். அன்பு என்கிற வாழ்வின் மூலம் தொலைக்கப்பட்டு தேடப்படுகிறதான நிலையும் வந்து விட்டது. பொருள் தேடுதலும், குவித்தலும் என்ற இலக்கில் பயணித்து இதயத்தை இயங்காது இருத்தி நீளுகிற வாழ்வு. இது நீளுகின்ற நாள் முழுதும் துயர் வந்து கவ்விநின்று எமைத் தொலைக்கும்.

பல பத்துக் காரணங்களால் எமது உயிரினுமினிய தேசத்தை விட்டுப் பிரிந்தோம். சொர்க்க பூமி என்று நினைத்து, உயிர் சுடரும் உன்னத தாயவள் பூமியை எட்டி உதைத்துப் புறப்பட்டோம். எனினும் பிரிந்து, பிரிவில் அழுகின்ற இதயங்கள் ஏராளம். எப்போது எமது பூமிக்கு திரும்புவோம் என்று ஏங்கி அழுகின்ற ஆத்மாக்களும் இருக்கின்றன. 'வந்துவிட்டோம்' என்று மனதைத் தேற்றி வாழ்பவர்களும் உண்டு. இவர்களுக்குள் வித்தியாசமாக விழிப்போடு இருந்த அருமையானவள் எங்களின் செல்வி சுஜிதா. நடனக் கலையில் சிறந்து விளங்கியவள். சிறுவயதிலிருந்தே போராட்டம் தொடர்பான கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருந்தாள். கலை பண்பாட்டுக் கழகத்தின் உறுப்பினராககவும் இருந்து விடுதலைக்காக தன்னால் இயன்றவரை உழைத்தாள்.

உயிர் தப்பி வாழ எண்ணிப் பிரிந்த புலம்பெயர்ந்தவர்களுள் அவளும் ஒருத்திதான். புகலிடத்திலேயே உயிர் பாதுகாப்பு இல்லாது போகின்ற அவலம், ஒரு பூச்சியைப் போல நெரிக்கப்பட்டு விடுகிற கொடுமையானது. *26-08-1993* காலை 7.30 மணிக்கு "அம்மா நான் பள்ளிக்குப் போட்டுவாறன்" என்று திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையோடு சென்றவள் பல நாட்களாய் வீடு திரும்பவில்லை.

"எந்த முகாமிலை இருப்பாள்? எந்த அரக்கர்கள் பிடிச்சுக் கொண்டு போனாங்களோ? எந்த றவுண்டப்புக்குள்ளை மாட்டுப் பட்டாளோ? குண்டடி பட்டுச் செத்தாளோ?" போர்நடக்கிற எமது தேசத்திலை தன் பிள்ளையைப் பிரிந்து துடியாய்த் துடிக்கிற ஒரு தாயின் நிலையை விட மிக மிக கொடுமையான அவலமான துடிப்போடு அந்தத் தாய் தந்தையர் தேடினர். பொலிசில் தன் பிள்ளையைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் புலிகளின் ஜேர்மன் கிளையினரின் கலைநிகழ்வொன்றில் செல்வி சுஜிதா.

காணவில்லை என்று முறைப்பாடு செய்தார்கள். பொலிசார் எந்த உரிய நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது குறித்து அக்கறைப் படவில்லை. வெளிநாட்டவர்கள் தானே என்று இருந்துவிட்டார்கள். இந்த அவலமான பாதுகாப்பற்ற நிலையை அந்தத் தாய் தந்தையர் உணர்ந்து, சட்ட அறிஞர் மூலம் தொடர்பு கொண்டு தமது பிள்ளையை நெடுநாளாகக் காணவில்லை என முறையிட்டார்கள்.

ஆனால், ஜெர்மனியில் லீனிச் நகரில் வசித்த சுஜிதா கொடிய கரங்களால் நசுக்கப்பட்டிருந்தாள். புலம்பெயர்ந்த ஒரு பட்சி புகலிடத்தில் மர்மமான முறையில் இறந்துபட்டது. நாசிகளாலோ அல்லது காமுகர்களாலோ அல்லது தமிழர் அரசியல் பின்னணிகளாலோ என்று பல சந்தேகங்களைக் கிளப்பிய முறையில் அவளது மரணம் மர்மமானதாகவே இருக்கிறது. கங்கெல்ற் என்ற காட்டுக்குள் பாசி படர்ந்த புற்தரைகளில் ஒரு பற்றைக்குள் வீசப்பட்டு, பெற்றோல் ஊற்றி கொடிய கரங்களின் பதிவுகள் அழிகின்ற வண்ணமாய் தீமூட்டி அவளது உடல் சிதைக்கப்பட்டுக் கிடந்தது.

இந்தக் கொடிய துயரினையும், தமக்கு தற்காலிகமான பாதுகாப்பும் இல்லை என்பதையும் உணர்ந்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒரு குடும்பமாக இணைந்து நின்றார்கள். சுஜிதாவின் மர்மமான மரணத்தையொட்டி ஜெர்மனியில் தமிழ் மாணவர் அமைப்பு மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

ஆம். புலம்பெயர்ந்தவர்களாகிய எமக்கு, எமது நிரந்தரப் பாதுகாப்பும், கௌரவமான, சுதந்திரமான வாழ்வும் எமது தாய் மண்ணில்தான் உண்டு. நாம் அனைவரும் விடுதலைக்காக உழைக்கின்ற அமைப்பில் இணைந்து அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும், தற்காலிகமான பாதுகாப்புக் கூட எமக்கு இல்லை என்பதையும் செல்வி சுஜிதாவின் மர்மமான மரணம் காட்டி நிற்கிறது. இது எமது துயர்; எமது அவலம். அவளது தாய் தந்தையரைப் போல நாமும் இத்துயரத்தில் கலப்போம். எங்கள் அனைவருக்கும் தற்காலிகத் தங்குமிடத்தில் கூட பாதுகாப்பில்லாது போகிற அவலத்தை உணர்வோம். எமது கானல் நீர் வாழ்க்கையை உணர்ந்து, விழித்திருந்து செயல்பட்டு எமது துயர்களை வெல்வோம்.

**நிதர்சன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொழும்பில் கைதாகும் அப்பாவித் தமிழ்ப்பெண்கள்

சிறிலங்காவின் தலைநகரான கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் திடீர் திடீரெனத் தமிழ்ப் பெண்கள் கைதுசெய்யப்படும் சம்பவங்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. சிறிலங்காவின் குற்றப் புலனாய்வுத் துறையினரும் காவல்துறையினரும் இணைந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாள 500க்கும் மேற்பட்ட பெண்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கொழும்பு நகரப்பகுதிகளில் உள்ளவிடுதிகளில் தங்கியிருந்த பெண்களும், பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களுமே மேற்படி கைதுசெய்யப்பட்டவர்களாவர். பெரும் குற்றவாளிகளைப் பிடிப்பது போன்று பெரும் எண்ணிக்கையிலான காவல்துறையினர் போய் சுற்றிவளைத்தே கைதுசெய்கின்றனர். தம்மால் கைதுசெய்யப்பட்ட தமிழ்ப் பெண்களிடமிருந்த ஆவணங்கள், சான்றிதழ்கள் என்பன போலியானவை என்றும், அதனால் அவர்கள் மீது தமக்குச் சந்தேகம் ஏற்பட்டதாகவும் காவல்துறையினர் கூறுகின்றனர். இப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் விசாரணைகளால் தமது சந்தேகம் உறுதியாகிக்கொண்டிருக்கிறது என்றும் மேலும் தெரிவிக்சின்றனர். இப்பெண்கள் ஆண்களுடன் சிறிய கூடுகளில் அடைக்கப்படுவதும், ஆண் புலனாய்வாளர்களால் விசாரணை என்ற பெயரில் கேவலத்துக்குள்ளாக்கப்படுவதும் கொழும்பில் பெண்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வேலைவாய்ப்புக்காகவும், வெளிநாட்டுப் பயணங்களுக்காகவும் கொழும்பு சென்ற அப்பாவித் தமிழ்ப் பெண்கள்தான் இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க, தாண்டிக்குளத்திலும் சமீப காலமாக தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்படுவது தெரியவருகிறது.

# நட்பு

கடலோரத்தில் நண்டு நடந்துகொண்டிருந்தது. மணலில் பதிந்த நண்டின் கால்தடத்தை அலை அழித்துக் கொண்டே இருந்தது.

நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஒரு நாள் நரி கடற்கரையோரம் நண்டின் கால்த்தடம் இருக்கிறதா என்று தேடி அலைந்தது.

வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப்பார்த்த நண்டுக்கு அலை தன் கால் தடத்தை அழித்த காரணம் இப்போதுதான் தெளிவானது.

அலையின் நட்பை அடிமனத்தால் போற்றியது நண்டு.


தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டது:

'முன்பே காப்பான் அன்பே நட்பு'

- காசிஆனந்தன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்